Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

### வால் நட்சத்திர சிதறல்கள் பூமியுடன் மோதலாம்

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வால்நட்சத்திரத்தின் சிதறல்கள் பூமியோடு மோதலாமென வானியியலாளர்கள் நம்புவதாக, சண்டேரெலிகிராப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த வால் வெள்ளியின் அசைவுகள் கவனமாக ஆராயப்படுவதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. மக்சூர் சூ என்று அழைக்கப்படும் இவ்வால் நட்சத்திரம் சூரியனை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் அமெரிக்க வானிலாளர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வால் வெள்ளியின் 5 துண்டுகள், (6 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 29 14-09-94 புதன்கிழமை ஓசை 208

# போர் நிறுத்தத்திற்கு தலைவர் வலியுறுத்து; சமாதான சூழல் பேச்சிற்கு அவசியம்!

## பி.பி.ஸிக்கு தலைவர் பிரபாகரன் பேட்டி

(லண்டன்)

சமாதானப் பேச்சுக்கள் சமாதானச் சூழலில், சுதந்திரமான முறையில், பரஸ்பர நல்லெண்ணத்துடன் நடைபெறுவதற்கு போர்நிறுத்தம் அவசியம் என்பதனை புதிய அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும் என பி.பி.ஸிக்குத் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இப்பேட்டியை முழுமையாக இங்கே தருகின்றோம்.

## தமிழ் பகுதியில் இயல்பு நிலை தோன்றவில்லை

கேள்வி: புதிய பிரதமர் சந்திரிகா அவர்கள், தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தனது முக்கியமான பணிகளில் ஒன்றாக இருக்கும் என்றும், இது தொடர்பாக உங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்போவதாகவும் கூறியிருக்கிறார். பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கான சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுவருவதாக கருதுகிறீர்களா?

பதில்: நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நாம் தயார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு சுமுகமான சூழ்நிலையில், ஒரு சமாதானமான சூழ்நிலையில் நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். புதிய அரசாங்கம் பொருளாதாரத் தடையைத் தளர்த்தியிருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான, நல்லெண்ண நடவடிக்கை. இதனை நாம் வரவேற்கிறோம்.

ஆயினும் பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படவில்லை. சில அத்தியாவசியப் பொருட்களுக்கான களின் போக்குவரத்திற்கான பாதைகளையும் அரசாங்கம் மூடிவைத்திருக்கிறது. இதனால், பொருளாதார நிலை சீராகப் போவதில்லை. மக்களின் துன்பச்சுமை குறையப்போவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழர் தாயகத்தில் ஒரு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம். போரை நிறுத்துவதற்கு தயாரென நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்கு அரசு தயங்குவதுபோலத் தெரிகிறது.

அரச படைகளின் அனர்த்தங்கள் தொடரவே செய்கின்றன. குறிப்பாக, கடற்படையினரின் தாக்குதல்கள் தொடர்கின்றன. இது, சமாதான சூழலுக்கு பங்கம் விளைவிப்பதாகவே அமையும். ஒட்டுமொத்தத்தில் பார்க்கும் பொழுது, தமிழ்ப்பகுதிகளில் இயல்புநிலை இன்னும் திரும்பவில்லை.

நல்லெண்ண சூழ்நிலை தோன்றிவருகிறது. ஆனால் சமாதான சூழ்நிலையும், சகஜநிலையும் இன்னமும் ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே, ஒரு



தலைவர் வே. பிரபாகரனுடன் பி. பி. ஸியின் "தமிழோசை" நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஆனந்தி.

## உடன்பாடு ஏற்பட்டால் அன்றி

ஆயினும் பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படவில்லை. சில அத்தியாவசியப் பொருட்களுக்கான தடை இன்னமும் தொடர்கிறது. இது ஒரு புறமிருக்க, மக்

நல்லெண்ண சூழ்நிலை தோன்றிவருகிறது. ஆனால் சமாதான சூழ்நிலையும், சகஜநிலையும் இன்னமும் ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே, ஒரு சுமுகமான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு அரசுதான் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## பேச்சிற்கு நாம் நிபந்தனை விதிக்கவில்லை

கேள்வி: நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகளுக்கு தயார் என நீங்கள் முன்பு கூறிவந்தீர்கள். இப்போது பொருளாதாரத் தடையை நீக்குங்கள், போர்நிறுத்தம் அறிவியுங்கள் என நிபந்தனைகள் விதிக்கிறீர்களே?

பதில்: பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகள் எதையும் நாம் விதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கு சமாதான சூழ்நிலை அவசியம் என்பதையே நாம் சுட்டிக்காட்டுகிறோம். யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யாத சூழ்நிலையில் போர் நடவடிக்கைகள் நிகழலாம் அல்லவா? சண்டையை ஒரு புறம் நிகழ்த்திக் கொண்டு சமாதானம் பற்றி பேசுவதில் அர்த்தமுண்டா? எனவேதான், சமாதானப் பேச்சுக்கு போர்நிறுத்தம் அவசியமெனக் கூறுகிறோம். ஏனென்றால், பொருளாதார அழுத்தமும் போர் நெருக்கடியும் இருக்கும்வரை சுதந்திரமான முறையில், பரஸ்பர நல்லெண்ணத்துடன் பேச்சுக்களை நடத்துவது சிரமமாக இருக்கும். இதனை புதிய அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

போர்நிறுத்தம் செய்வதற்கு அரசு இணங்குமானால் அதனை நல்லெண்ணத்தின் அறிகுறியாக, சமாதானத்தின் சமிக்கையாக நாம் கருதுவோம்.

## போர்ச் சூழல் பேச்சுவார்த்தையை பாதிக்கும்

கேள்வி: அரசு ஒரு நல்லெண்ண சைகையாக போர்நிறுத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள்? ஆனால் போர்நிறுத்தம் ஒன்று ஏற்பட்டால், புலிப்படையினர் தங்களைப் பலப்படுத்திக்கொள்வதற்காக இந்தப் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்துவார்கள் என்றதோர் கருத்து ராணுவ வட்டாரங்களில் நிலவுகிறது. இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: இராணுவ வட்டாரங்களில் நிலவும் இந்தக் கருத்து முற்றிலும் தவறானது என்றே நான் சொல்வேன்.

இராணுவரீதியில், போர்நிறுத்தம் எமக்கு சாதகமானதல்ல. எதிரியின் ஆயுதங்களைப் பறிப்பதிலும் அழிப்பதிலும் தான் எமது வளர்ச்சியும் பலமும் தங்கியிருக்கிறது. போர் நடவடிக்கைகள் மூலமே இது சாத்தியமாகிறது. எனவே, போர்நிறுத்தம் எம்மைப் பலப்படுத்தும் எனக் கருதுவது தவறு.

அப்படியிருந்தும், போர் நிறுத்தத்தை நாம் விரும்புவதன் காரணம், உண்மையான ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே அன்றி, வேறொன்றிற்குமல்ல.

அடுத்ததாக, போர்நிறுத்தம் செய்யப்படாத சூழ்நிலையில் திடீரென, எதிர்பாராத வகையில் மோதல்கள் நிகழலாம். உயிர்ச் சேதங்கள் ஏற்படலாம். இந்த நிகழ்வுகள் இடம்பெறும் பொழுது அவை சமாதான சூழலையும் பேச்சுக்களையும் பாதிக்கும் அல்லவா?

## தமிழர் தாயகம் எமது இனத்தின் குரல்

கேள்வி: தமிழர்களுக்கென ஓர் தாயகப் பகுதி வேண்டும் என்பதை நீங்கள் வலியுறுத்தி வருகின்றீர்கள்? ஆனால் சந்திரிகா அவர்களோ, இந்தத் தமிழர் தாயகம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், வடக்கும் கிழக்கும் ஒருங்கிணைவது என்பதும் ஏற்றுக்கொள்ளமுடியாதது என்றும் திட்டவட்டமாக கூறியிருக்கிறார். ஆனால் மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளுடனான வடகிழக்கு என்ற திட்டத்தை முன்வைக்கப்போவதாகவும் கூறியிருக்கிறார். இது பற்றி உங்களது நிலைப்பாடு என்ன?

பதில்:- தமிழருக்கு ஒரு தாயகம் வேண்டுமென்பதை நான் மட்டுமல்ல, தமிழ் இனம் முழுவதுமே, காலம் காலமாக வலியுறுத்தி வருகிறது. இது ஒரு வரலாற்று உண்மை. வடகிழக்கு மாகாணங்கள் அடங்கிய பிரதேசமானது தமிழ் பேசும் மக்களது, அதாவது) தமிழ் முஸ்லிம் மக்களது தாயகம். இது எங்களது நிலைப்பாடு.

பிரதமர் சந்திரிகா அவர்கள் இந்தப் பிரச்சினையில் எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பது எமக்குத் தெரியாது. அவர் எவ்விதமான புதிய திட்டத்தை வகுத்திருக்கிறார் என்பதும் எமக்குத் தெரியாது. எனவே, அத்திட்டத்தை பரிசீலனை செய்வதற்கு முன்பாக, எமது கருத்தை தெரிவிப்பது விவேகமானதல்ல.

பேச்சுவார்த்தையின் போது, இவ்விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பது தெரியவரும். அப்பொழுது, எமது கருத்தையும் கூறலாம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் செய்யக் கூடாது

### இராணுவ அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டாலன்றி போர் நிறுத்தம் செய்யப்படக் கூடாது என்று சிறிலங்காவின் இராணுவ அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை கூறியிருப்பதாக கொழும்பிலுள்ள பி.பி.சி முகவர் ஜோர்ச் ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவது இப்போது அரசின் முடிவில்தான் தங்கியுள்ளது. சிரேஷ்டபடை அதிகாரிகள் இது விடயத்தில் அரசுடன் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்று அரசியல் விமர்சகர்கள் மற்றும், நோக்கர்கள் கருதுவநாக தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியைத் தொடர்ந்து எழுந்துள்ள அர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளே பலமடைவார்கள்

### சண்டே ரைம்ஸ் பாதுகாப்பு செய்தியாளர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு போரை உற்று அவதானிப்பவர்கள் பிரதமர் சந்திரிகா விடுதலைப் புலிகளை பேச்சுக்கு அழைத்ததை வரவேற்பர். இராணுவ நடவடிக்கையின் மூலம் விடுதலைப் புலிகளே பலமடைவார்கள். 1983 ஜூலையில் 13 சிப்பாய்களை மட்டுமே கொல்லக்கூடியதாக இருந்த புலிகள் 10 வருடம் கழித்து 1993 நவம்பரில் பூநகரியில் ஒரே தாக்குதலில் 600 படையினரை கொல்லக்கூடிய நிலைக்கு வந்துள்ளனர். சந்திரிகாவின் முடிவை எதிர்ப்பவர்கள் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஆர்வம் இல்லாதவர்கள் என்கின்றனர். இவ்வாறு சண்டே ரைம்ஸின் பாதுகாப்பு செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிப்பதாவது, விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள இராணுவத்தினர் சிறிய குழுக்களாக செயற்பட்டு தாக்குதல் நடத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் 7-ம் ஆண்டு நினைவு நாள் நாளை ஆரம்பம்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள் நாளை ஆரம்பமாகின்றன. எதிர் வரும் 26 ஆம் திகதி வரை இந் நினைவு நாட்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளன. இதுகுறித்த ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்நாட்களில் வீதியெங்கும் அலங்கரித்து, வீடுகள் தோறும் பந்தலிட்டு அவரது உருவப்படம் வைத்து விளக்கேற்றி, மலர் வைத்து, மாலை சூட்டி, திலீபன் நினைவாக நடைபெறும் சிரமதானங்களில் கலந்துகொண்டு சிறப்பித்து இந்நாட்களில் வட்ட ரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும், எழுச்சியுடன் பங்கெடுத்து, இறுதி நாளில் கோட்ட ரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும் வீர வணக்க கூட்டத்திலும் பங்கு பற்றுமாறு யாழ் மாவட்ட மாவீரர் பணிமனை வேண்டியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி, படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

# வரி விளம்பரம்

### புதிய மீரா பிரசுரம் ''ஒரு பிடி மண்''

நாளைய சந்ததிக்காக... இன்றைய இலக்கியம் கே. ஆர். டேவிட் எழுதிய இம் மண்ணின் கதைகள் மலையில் இருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும்... இவ்வாரம் வெளிவருகின்றது. [9396]

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் பூநாறிமரத்தடி சபாபதி வீதியில் தலையாளி வைரவர் கோவிலுக்கு முன்னதாக உள்ள ஒழுங்கையில் 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை தொடர்பு கொள்ளவும்:- சுசீலா- இந்திரகுமார் தலையாளி ஒழுங்கை கொக்குவில். (9395)

### தவறிவிட்டது

3-09-94 அன்று நாவலர்வீதிக்கும் - ஆரியகுளத்திற்கும் இடையில் வேலணையைச் சேர்ந்த பா. இராஜலக்சுமி என்பவருடைய நிவாரண முத்திரை கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜெயா அழகுமாடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (9401)

### விளையாட்டு போட்டி

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் இயங்கி வரும் மேற்படி. பாலர் பாடசாலையின் விளையாட்டுப் பெருவிழாவினை சங்கானை காவல் பணிமனைப் பொறுப்பாளர் ஆரம்பித்து வைத்தார். வலிமேற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே சிவசோதி, சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி கி யோகேஸ்வரி மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய பாலர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். [41]

## சடலங்களை எரிக்க வாயுச் சூளைகள் அமையும்

### யாழ் மாநகர சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சடலங்களை வாயு மூலம் எரிப்பதற்கான சூளைகளை அமைப்பதற்கான பூர்வாங்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகின்றது,

தற்போது சடலங்களை எரிப்பதற்காக விறகு பயன்படுத்தப் படுவதாகவும் இதனால் அதிகரிக்கப்படும் செலவினங்களையும், விறகு தட்டுப்பாட்டையும் நீக்கும் முகமாக இவ் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது இச் சூளைகள் ஒவ்வொன்றும் ஒன்பது லட்சம் ரூபா செலவில் கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கோம்பையன் மணல் துண்டி ஆகிய மயானங்களில் இவற்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதில் வாயு கிடைக்காதநிலையில் குறைந்த விறகு கொண்டு சடலங்களை எரிக்க கூடியதாக இருக்கும் எனவும்தெரிய வருகின்றது.

இதே வேளை இச்சூளைகள் அமைப்பதற்காக யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச அலுவலகங்களின் உத்தேசஉதவிகளைபெற்று கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுகுறிப்பிடத்தக்கது (நி-88)

## கல்வி அபிவிருத்திதிட்டங்கள் விரைவில் அனுப்ப பணிப்பு

[நல்லூர்]

1995 ம் ஆண்டு யாழ் கல்வி வலயம் 1இல் மேற்கொள்ள உள்ள கல்வி சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்களை ஒக்டோபர் 14ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ் வலயம் 1இற்கானகல்விப்பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி வலயம் 1இல் இயங்கும் கோட்டக்கல்விப் பிரதி கல்விப் பணிப்பாளர்களையும். விசேட பாடங்களுக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளார். [17]

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## பிற்போடப்பட்டுள்ளது

அராலிவடக்கு சின்னவளவு ஞானவைரவர் ஆலய புனருத்தாரண நிதிக்காக 03-09-94 இரவு 7 00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 01-10-94 இரவு 7.00 மணிக்கு சீட்டிழுப்பு நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

(9399) -நிர்வாகம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம்

ஒப்பந்த அடிப்படையிலான பொருத்தமான அபேட்சர்களிடமிருந்து கீழே குறித்த /பதவிக்கான விண்ணப்பங்கள் 1994. 09 30 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி- காவற் பொறுப்பாளர்/சமையல்காரர் (ஒப்பந்த அடிப்படை)

சம்பளம்- ரூபா 3, 815/- மாதமொன்றுக்கு (நிலையானது) இத்துடன் வேலை நிறைவேற்றுப்படியாக 1994. 12 31 ஆம் திகதிவரை ரூபா 613.75 உம் செலுத்தப்படும்.

தகைமைகள்-

(அ) சிங்களம். தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும் ஆங்கிலம் பேசும் ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஆ) தளபாடங்கள், மட்பாண்டத் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி. துணிகள் என்பனவற்றைப்பேணுவதிலும், சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) உணவு வகைகளை தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

... மூலமும், நேர்முகப்பரீட்சை மூலமும்.

குறிப்பு- மேற்குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர் கொழும்பில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால்மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 ச மீ அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பமுடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

## நினைவு கூருகின்றோம்...

### 14-09-1994

1985 ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை -மூதூர் கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லோகிதன்** (கணபதிப்பிள்ளை யோகராசா - தம்பலகமம் - திருமலை)

1989 ம் ஆண்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் ரங்கன்** (வினாசித்தம்பி ரங்கநாதன்-காரை நகர் - யாழ்.)

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் கிரியன்** (கிருஷ்ணபிள்ளை நடனகுமார் 128, வில்சன் வீதி - கிளிநொச்சி)

1990ம் ஆண்டு தலைமன்னாரில் சிறிலங்கா கடற்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**2ம்லெப். ரகுபதி** (மரியதாஸ்யூட் அமல் ராஜ் - மணல்குளம், உயிலங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். நவாஸ் - சீலன்** அகஸ்ரின் அந்தோனிமுத்து சகாயசீலன் - முருங்கன் - மன்னார்)

**ரவி - அன்ரனி** (ஜேசுதாசன் மைக்கல் - சாவற்காடு -மன்னார்)

யாழ்- கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சிறிராம்** (சபாரத்தினம் தேசிகர் நந்தகுமார்-சாம்பல்தீவு - திருமலை)

1991 ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**ஜூனைதா** (வசந்தி தங்கராசா - மட்டு)

**செனித் - சோதிராசா** (இராசையா குமார் - ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு)

**உமா** (சித்திராதேவி ஆறுமுகம் - பூவரசங்குளம் - வவுனியா)

**ரவி - தயாளன்** (சின்னையா குமார் - கணேசபுரம் - கிளிநொச்சி)

**லெப். அலீபா** (மாமுடி கிருஷ்ணகுமார் - ஆண்டாங்குளம், அடம்பன் - மன்னார்)

**நியாஸ்** (இராமநாதன் ஜெயானந்தராசா - காரைநகர் - யாழ்)

**சுதா** (ரஜனி பாலேந்திரன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்)

**யூட்டி** (ஜெயதேவி இராசரத்தினம் - உடுத்துறை வடக்கு, தாளையடி - வடமராட்சி கிழக்கு)

**ஜெகன்** (ஜெயநாதன் ஜெரோம்- 25, மடம் வீதி யாழ்ப்பாணம்)

யாழ்- மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். குலன்** (வ. சபாபதிப்பிள்ளை பார்த்தீபன்- கோண்டாவில் வடக்கு யாழ்.

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா முப்படைகளாலும் கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

## திருப்பலி ஒப்புக்கொடுப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கடந்த 10 ம் திகதி பட்டமளித்து கௌரவிக்கப் பட்ட சகல கத்தோலிக்க மாணவ மாணவியருக்காக கடந்த ஞாயிறு காலை 7.30 மணிக்கு நல்லாயன் நடுநிலையத்தில் நன்றித் திருப்பலி இருளில் ஒளிவிளக்காய் என்னும் கருப்பொருளுடன் அருட்தந்தை எஸ் எச். ஜெபநேசன் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

(88)

## நிரந்தர நியமனம்

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் நான்கு வருடத்தினை பூர்த்தி செய்த பயிலுனர் ஆசிரியர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரினால் நிரந்தர ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது இந்த நிரந்தர நியமனத்தில் மேற்படி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 35 பயிலுனர் ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளனர்.

(41)

## கோழிக்கு தடுப்பூசி

தென்மராட்சிப் பகுதியில் கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

கிராமிய உற்பத்திக்குழுக்களூடாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அனுசரணையுடன் அண்மையில் எழுதுமட்டுவாள் தெற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



பலாலி விமானத்தளத்தினுள் ஊடுருவி கரும்புலிகளுக்கு உறுதுணையாக சென்ற வேவுப்புலி

## மேஜர் சேரன் / அசோக்

**[குணசிங்கம் குணராஜ (சதன்)]**

வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி,

| மைந்தனாய் | மாவீரனாய் |
|---|---|
| 30 - 07 - 1975 | 02 - 08 - 1994 |

மயிலை நகர் தந்த மாபெரும் வீரனே
தமிழர் படையாம் புலிகள் அணியில்
தளராத துணிவோடு வழிகாட்டியாக (வேவு)
தன்னையே அர்ப்பணித்தாய் தாயகம் மீட்க.

சென்ற களத்தில் நீயும் வென்ற கதை பல சொன்னாய்
வந்து போன போர்களில் வானுயர நின்றாய்
தானைத் தலைவன் தம்பி பிரபாவின் கட்டளைக்கமைய
புகுந்தாய் சிங்கத்தின் குகைக்குள் - கரும்புலிகளுடன் சேர்ந்து
வானூர்தி 'பெல்'' லுடன் பவலும் முடிந்தது - அத்துடன்
சிங்கத்தின் பல்லும் உடைந்தது
வீரமாணிக்கம் துறைதந்த வீர மறவனே
தவழ்ந்த மண்ணிலே தன்னையே அர்ப்பணித்த மாவீரனே
நாளை மலரும் தமிழ் ஈழத்திலே - எங்கள்
மன்னவன் முடியில் நீயும் ஓர் மாணிக்கம்.

(ஏனைய மாவீரரையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்)

எமது இல்லத்தில் நாளை வியாழன் (15-09-1994) அன்று நடைபெறும் நினைவஞ்சலியிலும் மதிய போசனத்திலும் அனைத்துப் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
தும்பளை வீதி,
4-ம் குறுக்குத் தெரு சந்தி,
பருத்தித்துறை.

(9400)

வயது- விண்ணப்ப முடிவு திகதியில் 58 வருடங்களுக்கு உட்பட்டவர்கள்.
தெரிவு- உளச்சார்பு வாய்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
1994.09.09

(சி-10331)

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10330)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
20-09 1974

வீரச்சாவு:
14-091991

### லெப்டினன்ட் குலன்
(சபாபதி பார்த்திபன்)

மானத்தைக் காத்த மறகுடி வேங்கை
மனித இதயத்தைக் கவர்ந்த நற்பிள்ளை திரத்தினால் நலமே
கொண்ட கொள்கை சிறந்திட இன்னுயிர் ஈந்தனையோ!
குல மானத்தைக்காத்த குணக்குன்றே கொண்ட கொள்கை தளராத
நற் பேறே நினைக்கின்றோம் உன் மறவாழ்வை நிம்மதி கொண்டு
இங்குவாழ்வதற்கே புறப்பட்ட உன்போன்ற தோழர்களை
என்றும் போற்றி நிதம் மலர் தூவுகின்றோம்;
சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரிகள், சகோதரர்கள்
மருமக்கள் பெறாமகன் ஆகியோர்

கோண்டாவில் வடக்கு.

(9393)

## விண்ணக வாழ்வில் 11 ஆண்டுகள் நிறைவு



பிறப்பு
10 - 02 - 1948

இறப்பு
14 - 09 - 1983

### திருமதி சுந்தரநாயகி கிளேற்றன்
(தேவி)

அம்மா!
ஆண்டவன் உங்களை எங்களிடமிருந்து எடுத்தாலும்
உங்கள் நினைவுகளை எங்களிடமிருந்து எடுக்கவில்லை
நீங்கள் எம்மைப் பிரிந்து - இன்றுடன்,
ஆண்டுகள் பதினொன்றானாலும்
பிரியவில்லை உங்கள் நினைவு எம்மைவிட்டு.
உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்தித்து,
கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலிக்கின்றோம் அன்னையே!

விண்ணக வாழ்வில் இறைவனுடன் இணைந்த எங்கள் அன்பு அன்னைக்காக இறையருள் வேண்டி 14 - 09 - 1994 காலை 6.00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் வாடும்,
பிள்ளைகள்.

16, றக்கா லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(9397)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# விஞ்ஞானம் O/L

# மாணவர் அரங்கு

## மாணவர் கவனத்திற்கு

வெப்பம் என்னும் அலகு 6-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் ஆண்டுகளில் தொடராக கற்று வந்த ஒன்றாகும். ஆனால் நாம் முந்திய ஆண்டுகளில் கற்றவற்றை மறந்தோ அல்லது மீட்கசந்தர்ப்பம்கிடையாதோபோயிருக்கலாம் எனவேவெப்பம் பற்றியமுழுஅறிவையும் பெறக்கூடியவகையில் எல்லா ஆண்டுப் பகுதிகளும் இங்கு தொகுத்து தரப்படுகிறது.

மறைவெப்பம் அடுத்த இதழில் தொடரும்

மேலும்

கடந்தவார இயைபாக்கமும் சமநிலையும் தொடர்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியிடமுடியவில்லை. அடுத்த மாணவர் அரங்கில் தொடர்ந்து வெளியாகும்.

-ஆசிரியர்

## வெப்பம்

### 01) வெப்பம் ஒரு சக்தியாகும்

### 02) வெப்பத்தை வழங்கும் சாதனங்கள் வெப்ப முதல்களாகும்

உ+ம் சூரியன், எரிபொருட்கள் எரியும் இடம் (அடுப்பு / சூளை) உராய்வு நடைபெறும் இடம் சில மின்சாதனங்கள் (மின்னழுத்தி / மின்னடுப்பு)

### 03) வெப்பம் :-

அ) ஒரு சடப்பொருள் உள்ளடக்கிய வெப்பசக்தியின் அளவே வெப்பமாகும்.

ஆ) வெப்பத்தின் அலகுகள்
1) கலோரி 2) யூல் (J) (சர்வதேசஅலகு)

குறிப்பு = 1 கலோரி = 4.2 யூல்
1000 கலோரி = 1 கி கலோரி.
1000 யூல் = 1 கி. யூல்.

### 04) வெப்பநிலை:-

அ) ஒரு பொருளில் உள்ள வெப்பத்தின் படித்திறனே வெப்ப நிலையாகும்.

ஆ) வெப்பம் செல்லும் திசையை தீர்மானிப்பது வெப்பநிலையாகும் வெப்பநிலை கூடியஇடத்திலிருந்து வெப்பநிலை குறைந்த இடத்திற்கே வெப்பம் செல்லும்.

இ) வெப்பநிலையின் அலகுகள்
1) °C (சதமபாகை)
°F (பரனைட்)

### 05) வெப்பக்கடத்தி:-

அ) வெப்பத்தை தமக்கூடாக செல்ல விடுபவை வெப்பக் கடத்திகள் ஆகும்.

ஆ) பொதுவாக உலோகங்கள் வெப்பக்கடத்திகள் ஆகும். (இரும்பு / செம்பு / அலுமினியம்)

இ) வெப்பக் கடத்திகள் சமையல் பாத்திரம், அழுத்திகள் செய்யப் பயன்படுகின்றன.

ஈ) வெப்பக் கடத்திகளில் விரைவாக வெப்பத்தை செல்ல விடுபவை எளிதிற் கடத்திகள் எனப்படும்.

ஆறுதலாக செல்ல விடுபவை அரிதிற் கடத்திகள் எனப்படும்.

உ+ம் நீர், கண்ணாடி என்பன அரிதிற் கடத்திகள் ஆகும்

குறிப்பு;- மேற்குறித்த அரிதிற் கடத்தி என்னும் கோட்பாடு பின்வருமாறு மாணவர்கள் பிரயோக்கிக்க நேரிடும்.

i) அதிகாலையில் கிணற்று நீர் ஏன் சூடாக உள்ளது

வெப்பத்தைக் கடத்த விரைவில் சூடாகிறது கிளாஸ் கண்ணாடியால் ஆனது கண்ணாடி அரிதிற் கடத்தி எனவே அது விரைவாக வெப்பத்தைக் கடத்தாது எனவே உடனே சுடுவதில்லை.

### 06) வெப்பக்காவலி:-

அ) வெப்பத்தை தமக்கூடாக செல்ல விடாதவை வெப்பக்காவலி ஆகும். உ+ம் மரம் இறப்பர், மாபிள்

ஆ) வெப்பக் காவலிகள் சமையல் பாத்திரம், அழுத்தி என்பவற்றிற்கு கைப்பிடி இட பயன்படும்

இ) பனிக்கட்டி (Ice) மரத்தூளினுள் இடப்பட்டுள்ளபோது உருகுவதில்லை ஏன்?

பனிக்கட்டி வளியில் இருந்து வெப்பத்தைப் பெற்றே உருகும். மரம் வெப்பக்காவலி எனவே மரத்தூளால் மூடினால் வளியின் வெப்பம் பனிக்கட்டியை அடையாது எனவே மரத்தூளால் மூடினால் உருகாது.

### (07) வெப்பம் செல்லும் முறைகள்:

(அ) வெப்பமானது வெப்பநிலை கூடிய இடத்தில் இருந்து வெப்பநிலை குறைந்த இடத்திற்கு செல்லும் என்பதை அறிந்து கொண்டோம்

(ஆ) வெப்பம் மூன்று பிரதான முறைகளால் ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்குச் செல்லும் அவையாவன.
(1) கடத்தல்
(2) மேற்காவுகை (உடன்காவுகை)
(3) கதிர் வீசல் (கதிர்ப்பு)

### (இ) கடத்தல்:-

(1) ஊடகத்தின் மூலக்கூறு அசையாதிருக்க அதனூடாக வெப்பம் செல்லும் முறை கடத்தலாகும்.

(2) திண்மஊடகங்களினூடாக பிரதானமாக கடத்தல் முறையாலேயே வெப்பம்செல்லும்

### (+) மேற்காவுகை:-

(1) ஊடகத்தின் மூலக்கூறுகள் இடம்பெயர்ந்து வெப்பத்தைக் கொண்டு செல்லல் மேற் காவுகை ஆகும்.

(2) திரவ ஊடகங்களிலும், வாயு ஊடகங்களிலும் பொதுவாக மேற்காவுகை முறையாலேயே வெப்பம் கொண்டு செல்லப்படும்

### (உ) கதிர் வீசல்:-

(1) வெப்ப முதலில் இருந்து வரும் வெப்பக்கதிர் இடையில் உள்ள ஊடகத்தை சூடாக்காது அடுத்துள்ள ஊடகத்தை சூடாக்கும் முறை கதிர் வீசலாகும்

(2) சூரியனில் இருந்து வரும் வெப்பக்கதிர் வளியை சூடாக்காது புவியை சூடாக்கல்-

(3) வெற்றிடங்களினூடாக கதிர் வீசல்முறையாலேயே வெப்பம் செல்லும்.

### வெப்பக்குடுவை:-

i ஒரு பொருளின் வெப்ப நிலையை மாறாது பேணும் சாதனமாகும்

ii இதில் கடத்தல், கதிர் வீசல், மேற்காவுகை ஆகிய முறைகளால் வெப்பம் உள்ளேயோ அல்லது வெளியேயோ செல்லாது தடுக்கப் பட்டிருப்பதனால் வெப்ப நிலை மாறாது பேணப்படுகிறது.

iii இதனுள் சூடான பொருளை வைத்தால் ஆறாமல் இருப்பது போல குளிரான பொருளும் சூடாகாது இருக்கும்

iv இங்கு பின்வரும் முறைகளால் வெப்பம் இழத்...

உறாது இருப்பதனால் கடத்தல் முறையால் வெப்பம் இழப்பது தடுக்கப்படும்

### (08) வெப்பத்தால் சடப்பொருட்களில் ஏற்படும் மாற்றங்கள்

(அ) சடப்பொருளைவெப்பப்படுத்தும்பொழுது அதில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படும்
(1) அதன் வெப்பநிலை அதிகரிக்கும்
(2) விரிவடையும்
(3) நிலைமாற்றத்திற்கு உள்ளாகும்.

### (ஆ) வெப்பத்தால் சடப்பொருட்களில் ஏற்படும் விரிவு.

(1) சடப்பொருளின் எல்லா நிலைகளிலும் (திண்ம/திரவ/வாயு)விரிவு ஏற்படும்.

(2) திண்மங்களிலும் திரவங்களில் ஏற்படும் விரிவு கூடவாகவும் திரவங்களிலும் வாயுக்களின் விரிவு கூடவாகவும் இருக்கும்.

(3) வளையம் ஒன்றினுள் மட்டுமட்டாக நுழையும் இரும்புக் குண்டை சூடாக்கியபின் செலுதினால் அது வளையத்தினூடாக நுழையாது இதிலிருந்து திண்மம் வெப்பத்தால் விரியும் என அறியலாம்.

(4) திண்மங்களின் விரிவு காரணமாக செயற்பாடுகள்.

## சு. அருள்நேசன்

(1) வண்டில் சில்லிற்கு வளைய மிடல்
(2) இறுகிய போத்தல் மூடியை கழட்டல்
(3) கோடை காலத்தில் தந்திக்கம்பிகள் தொய்தல்
(4) தண்டவாளங்களுக்கிடையில் இடை வெளி விட்டுப் பொருத்துதல்
(5) திரவங்களின் விரிவை ஆதாரமாக கொண்டே திரவ வெப்பமானிகள் இயங்குகின்றன.

### (இ) வெப்பமானிகள்

(1) நாம் சதமவெப்பமானி, பரனைட் வெப்பமானி என இரு அலகுத் திட்டங்களில் வெப்பமானிகளை பயன்படுத்துகிறோம் (வேறு அளவுத் திட்ட வெப்பமானிகளும் உண்டு)

(2) வெப்பமானிகளில் கீழ் நிலைப் புள்ளி மேல் நிலைப் புள்ளி என இரு வகைப் புள்ளிகள் காணப்படும்

(3) கீழ் நிலைப்புள்ளி பனிக்கட்டியின் உருகுநிலையும் மேல் நிலைப்புள்ளி தூய நீரின் கொதிநிலையும் ஆகும்

(4) கீழ் நிலைப் புள்ளி 0° ஆகவும் மேல் நிலைப் புள்ளி 100° ஆகவும் கொண்ட 100 பிரிவுகள் காணப்படும் வெப்பமானி சதம வெப்பமானியாகும்

(5) கீழ் நிலைப்புள்ளி 32° ஆகவும் மேல் நிலைப் புள்ளி 212° ஆகவும் கொண்ட 180 பிரிவுகள் காணப்படும் வெப்பமானி பரனைட் வெப்பமானியாகும்

(6) 100°C பிரிவு = 180°F பிரிவு

$$\text{எனவே } 1°C = \frac{180}{100} = \frac{9}{5}\ F$$

$$1°F = \frac{100}{180} = \frac{5}{9}\ C$$

இனி °F ஐ °C ஆக்க

$$C = F - 32 \times \frac{5}{9}$$

உ+ம் 95°F

$$C = (95-32) \times \frac{5}{9}$$

$$= 63 \times \frac{5}{9}$$

$$= 35°C$$

### நிலைமாற்றம்;

(அ) நிலைமாற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்
உருகுதல், ஒடுங்குதல், ஆவியாதல், உறைதல், பதங்கமாதல்

(ஆ)
I திண்ம நிலையில் இருந்து திரவமாதல் - உருகுதல் எனப்படும்
II திரவ ,, ,, வாயுவாகுதல் - ஆவியாதல் எனப்படும்
III வாயு ,, ,, திரவமாதல் - ஒடுங்குதல் எனப்படும்
IV திரவ ,, ,, திண்மமாகுதல் - உறைதல் எனப்படும்
V திண்ம நிலையில் இருந்து வாயு நிலைக்கு அல்லது வாயுநிலையில் இருந்து திண்ம நிலைக்கு மாறுதல் - பதங்கமாதல் எனப்படும்

(இ) உருகுதலும் ஆவியாதலும் வெப்பத்தைப் பெற்றும் ஒடுங்குதலும் உறைதலும் வெப்பத்தை இழந்தும் நடைபெறும் நிலைமாற்றங்களாகும்

(ஈ) பதங்கமாக கூடிய பொருட்கள் :- கற்பூரம், பூச்சியுருண்டை (நெப்தலீன்) அமோனியம் குளோரைட்டு, அயடீன்

### தன் வெப்பம்

(அ) ஒரு அலகு திணிவுள்ள பொருளை ஒரு பாகைக் கூடாக வெப்பமாக்க தேவையான வெப்பம் தன் வெப்பமாகும்.

உ+ம் 40 Kg திணிவை 30°Cயில் இருந்து 40°Cக்கு சூடாக்க தேவையான வெப்பம் 1500J எனில் தன் வெப்பம்

40Kg ஐ 10°C (30° இல் இருந்து40°)ற்கு சூடாக்க தேவையான வெப்பம் = 1500

$$\therefore 40Kg\ 1°C \quad ,, \quad = \frac{1500}{10}$$

$$\therefore 1Kg\ 1°C \quad ,, \quad = \frac{1500}{40 \times 10} = 3.75\ J$$

$\therefore$ தன் வெப்பம் = 3. 75 J/Kg/°C

$$\text{தன் வெப்பம்} = \frac{\text{வழங்கிய வெப்பம்}}{\text{திணிவு} \times \text{வெப்பநிலைமாற்றம்}}$$

$$S = \frac{H}{M\theta}$$

S- தன் வெப்பம் H- வெப்பம் M- திணிவு
θ (தீற்றா) - வெப்பநிலை மாற்றம்

தன் வெப்பத்தின் அலகு
[1] $J\,g^{-1}\,C^{-1}$
[2] $J\,Kg^{-1}\,C^{-1}$

பயிற்சி

(1) ஒரு பதார்த்தத்தின் தன் வெப்பம் $0\ 8Jg^{-1}C^{-1}$ என்பதில் இருந்து யாது விளங்குகிறீர்.

(2) 80g திணிவுள்ள திண்மத்தை 30°cயில் இருந்து 60°C க்கு சூடாக்க 1600J வெப்பம் தேவைப் பட்டால் அதன் தன் வெப்பம் யாது?

(3) $0.4\,J\,g^{-1}\,C^{-1}$ தன் வெப்பம் உள்ள 120g திணிவுள்ள திண்மத்தை 30°Cயில் இருந்து 50°Cக்கு சூடாக்க தேவையான வெப்பத்தைக் காண்க

(4) $1\ 8\,J\,g^{-1}\,C^{-1}$ தன் வெப்பம் உள்ள திண்மம்

கள் ஆகும்

குறிப்பு;- மேற்குறித்த அரிதிற் கடத்தி என்னும் கோட்பாடு பின்வருமாறு மாணவர்கள் பிரயோக்கிக்க நேரிடும்.

i) அதிகாலையில் கிணற்று நீர் ஏன் சூடாக உள்ளது?

நீர் ஓர் அரிதிற் கடத்தி என்பதனால் அது சூழலிற்கு வெப்பத்தை விரைவில் இழக்காது ஆனால் காலையில் சூழல் வெப்பநிலை குறைவாக இருக்க நீர் சூடாக உள்ளது.

ii) ஒரே வெப்பநிலையில் உள்ள வெந்நீரை ஒரு எவர்சில்வர் தம்ளரினுள்ளும் கிளாசினுள்ளும் ஊற்றி அவற்றை கையால் பிடிக்கும்போது தம்ளரே அதிக சூடாக உள்ளது ஏன்?

தம்ளர் உலோகம் எளிதிற் கடத்தி விரைவாக

னால் வெப்ப நிலை மாறாது பேணப்படுகிறது.

iii இதனுள் சூடான பொருளை வைத்தால் ஆறாமல் இருப்பது போல குளிரான பொருளும் சூடாகாது இருக்கும்

iv இங்கு பின்வரும் முறைகளால் வெப்பம் இழத்தல், அல்லது ஏற்றல் தடுக்கப்பட்டுள்ளது

i போத்தலின் சுவர் பளபளப்பாக காணப்படுவதனால் கதிர் வீசல் முறையால் வெப்பம் செல்வது தடுக்கப்படும்.

ii இது இரட்டைச் சுவருடைய போத்தல் இரு சுவர்களுக்கிடையிலும் வெற்றிடம் காணப்படுவதனால் மேற்காவுகை முறையால் வெப்பம் செல்வது தடுக்கப்படும்.

iii உலோக உறையுடன் தக்கையால் தொடுகை

எனவே $1^\circ C = \frac{180}{100} = \frac{9}{5}$ F

$1^\circ F = \frac{100}{180} = \frac{5}{9}$ C

இனி °Cஐ Fஆக மாற்ற செய்யவேண்டியது

$F = C \times \frac{9}{5} + 32$

உ+ம் $30^\circ C$

$F = 30 \times \frac{9}{5} + 32$

$= 54 + 32$

$= 86^\circ F$

(3) 0.4 J g C தன் வெப்பம் உள்ள 120g திணிவுள்ள திண்மத்தை 30°Cயில் இருந்து 50°Cக்கு சூடாக்க தேவையான வெப்பத்தைக் காண்க
-1-1

(4) 1 8 J g C தன் வெப்பம் உள்ள திண்மம் 40°Cயில் இருந்து 70°Cக்கு சூடாக்க 3240 J வெப்பம் தேவைப்பட்டால் அதன் திணிவு யாது
-1 -1

(5) 1.8 J g C தன் வெப்பமுள்ளதும் 90g நிறையுள்ளதுமான திண்மத்திற்கு 1600J வெப்பம் வழங்கினால் அதில் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தைக் காண்க

(மறை வெப்பம் அடுத்த வாரம் தொடரும்)

---

# கணிதம் O/L

**கூட்டல் விருத்தி தொடர்ச்சி ......**

**பயிற்சி (6) இற்கான விடைகள்**

i -4982
ii 9016.9
iii ரூ 4321.00
iv அ) ரூ 266.50
ஆ) ரூ 5609 00
v 221.60

## சில உதாரணங்கள்

**உதாரணம் (1)**

கூட்டல் தொடர் ஒன்றின் முதல்n உறுப்புக்களின் கூட்டுத் தொகை $5n-n^2$ ஆகும்

(அ) தொடரைக் காண்க

(ஆ) முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத் தொகையினைக் காண்க

(இ) இத்தொடரின் முதல் உறுப்பிலிருந்து கூட்டுத் தொகை பூச்சியமாவதற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

**விடை**

அ) $S_n = 5n - n^2$

$n=1 \rightarrow S_1 = 5 \times 1 - 1^2$

$S_1 = 4$

$S_1$ என்பது ஒரு உறுப்பின் கூட்டுத் தொகையாகும் அதாவது 1ம் உறுப்பு ஆகும்

∴ 1ம் உறுப்பு = 4.

$S_2 = 5 \times 2 - 2^2$

$S_2 = 6$

$S_2$ என்பது இரு உறுப்புக்களின் கூட்டுத்தொகையாகும் ஆனால் முதலாம் உறுப்பு 4 ஆகும்.

∴ இரண்டாம் உறுப்பு $= 6 - 4$
$= 2$

$S_3 = 5 \times 3 - 32$
$= 6$

$S_3$ என்பது மூன்று உறுப்புக்களின் கூட்டுத் தொகையாகும். ஆனால் இரு உறுப்புக்களின் கூட்டுத் தொகை 6 ஆகும்

ஆகவே மூன்றாம் உறுப்பு $= 6 - 6$
$= 0$

∴ தொடர் 4, 2, 0,......…

ஆ) இவ்வினாவைப் பொறுத்தவரை கூட்டுத் தொகை காண்பதற்கான நியமசமன்பாடு $S_n = 5n - n^2$ ஆகும் அதில் nஇற்கு பெறுமானங்களை இட்டு கூட்டுத் தொகையினைக் காணமுடியும்.

n = 7ஆக

$S_7 = 5 \times 7 - 7^3$
$= 35 - 49$
$= 14$

∴ முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத் தொகை 14 ஆகும்.

இ) இங்கு கூட்டுத்தொகை $S_n = 0$ என தரப்பட்டுள்ளது.

$S_n = 5n - n^2$

$0 = 5n - n^2$

$0 = n(5 - n)$

$n = 0$ அல்லது $5 - n = 0$
$n = 5$

∴ $n = 0$ அல்லது $n = 5$

ஆனால் $n = 0$ எனும் விடை இவ்வினாவுக்குப் பொருத்தமானதல்ல

∴ $n = 5$

∴ முதல் 5 உறுப்புக்களின் கூட்டுத் தொகை பூச்சியமாகும்.

**உதாரணம் 2**

அ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை யாது;

ஆ) அவற்றின் கூட்டுத்தொகை யாது?

இ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத் தொகை யாது

ஈ) அவற்றின் கூட்டுத் தொகையாது?

உ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள 7இன் மடங்கு அல்லாத எண்களின் கூட்டுத் தொகை யாது?

**விடை**

(அ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை நூறு என இலகுவாக கூறிவிடமுடியும் ஆனால் இது செய்கை முறைஅற்ற ஓர் விடையாகும்.

ஒன்று தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் தொடர் பின்வருமாறு அமையும்.

1,2,3 ......... 100 இது கூட்டல் தொடர் ஆகும்

இங்கு $a = 1,\ d = 1,\ T_n = 100,\ n = ?$

$T_n = a + (n-1)d$

$100 = 1 + (n-1)1$

$99 = n - 1$

$100 = n$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

(ஆ) $a = 1,\ d = 100,\ n = 100$

$S_n = \frac{n}{2}(a + l)$ (∴ இறுதி உறுப்பு தெரியும் என்பதனால் இச்சமன்பாட்டினை உபயோகிக்கலாம்)

$S_{100} = \frac{100}{2}(1 + 100)$

$= 50 \times 101$

$= 5050$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் கூட்டுத் தொகை 5050 ஆகும்.

(இ) 1 தொடக்கம் 100 வரையுள்ள இரட்டை எண்களின் தொடர் பின்வருமாறு அமையும்

2, 4, 6 - - - - - - 100 இது கூட்டல் தொடர் ஆகும்

$a\ 2,\ d = 2,\ T_n = ,100,\ n = ?$

$T_n = a + (n-1)d$

$100 = 2 + (n-1)2$

$98 = (n-1)2$

$\frac{98}{2} = n - 1$

$49 = n - 1$

$50 = n$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள இரட்டை எண்களின் எண்ணிக்கை 50 ஆகும்

(ஈ) $a = 2,\ d = 100,\ n = 50$

$S_n = \frac{n}{2}(a + l)$

$S_{50} = \frac{50}{2}(2 + 100)$

$= 25 \times 102$

$= 2550$

**த. நித்தியானந்தம்**
சரசாலை

∴ இரட்டை எண்களின் கூட்டுத்தொகை 2550 ஆகும்

உ) இவ்வினாப் பகுதியைப் பொறுத்தவரை 7இன் மடங்குகள் அல்லாத எண்களைக் கூட்டல் தொடர் வடிவில் எழுத முடியாது ஆனால் 7 இன் மடங்குகளை எழுதமுடியும்.

ஆகவே 7இன் மடங்குகளின் கூட்டுத்தொகையினைப் பெற்று பின்னர் மொத்த எண்களின் கூட்டுத் தொகையிலிருந்து கழித்தல் வேண்டும்.

7இன் மடங்குகளின் தொடர்

7, 14, 21, ......... 98

$a = 7,\ d = 7,\ T_n = 98,\ n = ?$

$T_n = a + (n - 1)d$

$98 = 7 + (n-1)7$

$91 = (n-1)7$

$\frac{91}{7} = n - 1$

$13 = n - 1$

$14 = n$

∴ 7 இன் மடங்குகளின் எண்ணிக்கை = 14

$S_n = \frac{n}{2}(a + l)$

[4ஆம் பக்கம் பார்க்க]

# தூயகணிதம் A/L
## PURE MATHEMATICS

### நிகழ்தகவுக் கொள்கை (Probability theory)

**அலகு 1: மாதிரிவெளி, நிகழ்ச்சிகள், விதிகள்**

நாளாந்த வாழ்க்கையில் இயற்கையாக நிகழக்கூடிய பல எதிர்கால நிகழ்ச்சிகளின் விளைவுகள் அல்லது அவை பற்றி மனதில் தோன்றும் எண்ணங்கள் கருத்துக்கள் போன்றவற்றைப் போதுமான அளவிற்கு திட்டவட்டமாக எடுத்தியம்புதல் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட தொன்றாகும். எனினும் பல நிலைமைகளில் எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் நிகழ்வுகளைப் பற்றிய விளைவுகள் அறியப்பட வேண்டிய தொன்றாக உள்ளது. இவ்விளைவுகளை மிகக் கூடிய ளவுக்குத் திருத்தமாக அறிவதற்கு மட்டுமல்லாது நிகழ்ச்சி ஒன்றின் நிகழ்விற்கான சாத்தியக்கூறு பற்றிய நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கும் நிகழ்தகவு பயன்படுகின்றது, எவ்வகையான ஒரு நிகழ்ச்சி, நேர்தகவுக் காரணத்தையொட்டி நிகழக்கூடியதாகவும் மீண்டும், மீண்டும் ஏற்படக் கூடியதாகவும் அமைகின்றதோ, அவ்வாறான நிகழ்ச்சிகளுக்கே நிகழ்தகவு பயனளிக்கின்றது. நிகழ்ச்சிகளின் நிகழ்விற்கான சாத்தியக் கூறை ஓரளவிற்காவது திருத்தமாக அளவிட்டு எண் பெறுமானத்தில் தருவதே நிகழ்தகவாகும். இவ்விதம் கணித்துக்கூறுவது நடைமுறைச் செயல்களுக்கு முரண்படாதிருத்தல் விரும்பத்தக்கதாகும்.

நிகழ்ச்சியொன்றின் நிகழ்தகவைக் காண்பதற்கு அந்நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட [எழுமாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். பரிசோதனை ஒன்றில், அதன் பெறுபேறுகளை எதிர்வு கூற முடியாமலிருக்கும் போதும் அதே நிபந்தனைகளின் கீழ் அப்பரிசோதனையை மீண்டும் மீண்டும் நிகழ்த்தக் கூடியவாறுஇருக்கும் போதும், அது எழுமாறான பரிசோதனை (**Random Experiment**) எனப்படும்.

இவ் எழுமாறான பரிசோதனையில் இருந்து மாதிரிவெளி ஒன்று அமைக்கப்படும்

மாதிரி வெளி **(Sample Space)**

எழுமாறான பரிசோதனை ஒன்றில் பெறப்படும் சகல இயல்தகுவான பெறுபேறுகளின் சேர்க்கையே மாதிரிவெளி என வரையறுக்கப்படும் இது S இனால் குறிக்கப்படும்.

மாதிரிப்புள்ளிகள் **(Sample Points)**

மாதிரிவெளி ஒன்றில் இடம் பெறும் உறுப்புகள் அதன் மாதிரிப்புள்ளிகள் எனப்படும்.

தொடையொன்றில் காணப்படுவது அதன் மூலகங்கள் என்பது போல் மாதிரிவெளியில் மாதிரிப்புள்ளிகள் காணப்படும். மாதிரிவெளியொன்றில்,

(1) ஒரு மாதிரிப்புள்ளி ஒரேயொரு தடவை மட்டுமே எழுதப்படும்


(2) மாதிரிப்புள்ளிகள் எந்த ஒழுங்கிலும் எழுதப்படலாம்.

(உ+ம்) (1) ''சதுரமுகித் தாயக்கட்டையொன்றை உருட்டுதல்'' என்ற எழுமாறான பரிசோதனை ஒன்றில் அமைக்கப்படும் மாதிரிவெளி **S** பின்வருமாறு அமையும்.

S= [1, 2, 3, 4, 5, 6]


(உ+ம்) (2) 3 சிவப்பாகவும் [2 கறுப்பாகவும் உடைய 5 வெவ்வேறான குண்டுகளைக் கொண்ட பெட்டியொன்றிலிருந்து ஒவ்வொன்றாக இரண்டு குண்டுகள் எழுமாறாக எடுக்கப்பட்டு அவற்றின் நிறங்கள் குறிக்கப்படும் பரிசோதனையில் அமைக்கப்படும் மாதிரிவெளி

(a) பிரதிவைப்புடன் **(With replacement)**




$$S = \left| \begin{matrix} (R_1R_1), & (R_1R_2), & (R_1R_3,) & (R_1W_1), & (R_1W_2), \\ (R_2R_1), & (R_2R_2), & (R_2R_3), & (R_2W_1), & (R_2W_2), \\ (R_3,R_1) & (R_3,R_2) & (R_3R_3) & (R_3,W_1) & (R_3,W_2) \\ (W_1,R_1) & (W_1,R_2) & (W_1,R_3) & (W_1,W_1) & (W_1,W_2) \\ (W_2R_1), & (W_2R_2) & (W_2R_3) & (W_2W_1) & (W_2W_2) \end{matrix} \right|$$

(b) பிரதிவைப்பில்லாமல் **(Without Replacement)**




$$S = \left| \begin{matrix} (R_1R_2) & (R_1R_3) & R_1W_1) & (R_1w_2) \\ (R_2R_1) & (R_2R_3) & (R_2W_1)) & (R_2W_2) \\ (R_3R_1) & (R_3R_2) & (R_3W_1) & (R_3W_2) \\ (W_1R_1) & (W_{21}R) & (W_1R_3) & (W_1W_2) \\ (W_2R_1) & (W_2R_2) & (W_2R_3) & (W_2W^1) \end{matrix} \right|$$

மாதிரி வெளியில் பல வகைகள் உள.

1) முடிவுள்ள மாதிரிவெளி **(Finite Sample Space)**

ஒரு மாதிரிவெளி முடிவுள்ள மாதிரிப்புள்ளிகளைக் கொண்டிருக்கும் எனின் அது முடிவுள்ள மாதிரிவெளி ஆகும்.

(உ+ம்) 1) ''நாணயமொன்றை உருட்டுதல்'' தரும் மாதிரிவெளி **S** பின்வருமாறு அமையும்.

**S= [ H,T ]**

(உ+ம் (2) ''நாடகவிழா ஒன்றின் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் **A, B, C.** எனும் 3 நாடகக் குழுக்களின் தெரிவுகள் '' தரும் மாதிரி வெளி **S** பின்வருமாறு அமையும்.

**S = [ (A,B,C)** இன் வரிசை மாற்றங்கள்]

**S = [ ABC , ACB, BAC, BCA, CAB, CBA]**

2) முடிவற்ற மாதிரிவெளி **(Infinite Sample Space)**

ஒரு மாதிரிவெளி முடிவற்ற மாதிரிப் புள்ளிகளைக் கொண்டிருக்கும் எனின் அது முடிவற்ற மாதிரி வெளி ஆகும்.

(உ+ம்) 1] ''முதன்மை எண்களைத் தெரிதல்'' தரும் மாதிரிவெளி **S** பின்வருமாறு அமையும்.

S = [2, 3, 5, 7, 11, 13, 17, 19 ........]

3) பின்னக மாதிரிவெளி **(DIscrete Sample Space)**


மாதிரிவெளியிலுள்ள மாதிரிப்புள்ளிகள் எண்ணத்தக்கவை எனின் அது பின்னக மாதிரிவெளி ஆகும்.

(உ+ம்) (1) மேலுள்ள உதாரணத்தில் **S** என்பது முடிவற்ற பின்னக மாதிரிவெளி ஆகும்


**ஸ்ரீ. கிருஷ்ணகுமார்**
B. SC. Dip in Edu
கணித ஆசிரியர் (உடுவில் மகளிர் கல்லூரி)


(உ+ம்) (2) ஒரு பெட்டி சிவப்பு (R), பச்சை (G), மஞ்சள் (Y), நிறமுடைய ஒரே மாதிரியான அட்டைகளைக் கொண்டுள்ளது. இதிலிருந்து ஒரு அட்டை எழுமாறாக எடுக்கப்படுகின்றது.

(a) பிரதிவைப்புடன் (b) பிரதிவைப்பின்றி




**S- [RR, RG, RY, GR, GG, GY ,YR, YG,YY]**

**S- [RG, RY, GR, GY, YR, YG]**

தொடர் மாதிரி வெளி **(Continous Sample SPace)**

மாதிரிவெளியிலுள்ள மாதிரிப்புள்ளிகள் எண்ண முடியாமலிருப்பின் அது தொடர்மாதிரிவெளி ஆகும்,

(உ+ம்) (1, மின்கல வானொலிப் பெட்டியின் ஆயுட்காலத்தை (மணித்தியாலத்தில்) அளக்கும் பரிசோதனையில் அமைக்கப்படும் மாதிரி வெளி நேர் மெய் எண்களைக் கொண்டிருக்கும்.

$$S- = \{X;\ 0 \leq X < \infty\}$$

[உ+ம்] [2] பஸ்தரிப்பு நிலையமொன்றில் ஒருவர் காலை 6.00 மணியிலிருந்து 10.00 மணி வரை பஸ்சிற்காக காத்து நிற்றல்.

$$S = \{t:\ 6 \leq t \leq 10\}$$

(தொடரும்)

# கணிதம்

$$S_{14} = \frac{14}{2}(7+98)$$

$$=7 \times 105$$

$$=735$$

∴ 7இன் மடங்குகள் அல்லாத எண்களின் கூட்டுத் தொகை=5050-735=4315 ஆகும்

1.

(1) +16, +13, +10, ... ... ... -131 எனும் விருத்தியைக் கூர்ந்தாராய்ந்து அது ஒரு கூட்டல் விருத்தியா பெருக்கல் விருத்தியா எனக் காரணம் தந்து கூறுக.

(2) மேலே (1) இலுள்ள விருத்தியின் **n** வது உறுப்பை **n** இற் கண்டு அதனை எளிய வடிவில் தருக.

(3) இந்த விருத்தியின் எந்த உறுப்பு - 131 ஆகும்?

(4) மேலுள்ள விருத்தியின் முதல் 22 உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க,

(1992 டிசம்பர்)

2.

(அ) கூட்டல் தொடர் ஒன்றின் முதலாம் உறுப்பு **a** ஆகவும் பொதுவித்தியாசம் **d** ஆகவும் இருப்பின்,

(1) **n** வது உறுப்பிற்கான சூத்திரத்தையும்,

ப்பு 50 ஆகும் இத்தொடரின் முதல் இருபத்தொரு உறுப்புக்களின் கூட்டுத்தொகை 420 எனில், அதன்,

(1) முதலுறுப்பு (2) பொதுவித்தியாசம் என்பனவற்றைக் காண்க.

(1990 டிசம்பர்)

4. கூட்டல் தொடர் ஒன்றின் முதலாம் உறுப்பும் கடைசி உறுப்பும் முறையே -3,36 ஆகும். இக் கூட்டல் தொடரின் உறுப்புக்களின் கூட்டுத் தொகை 168 எனின்

(1) உறுப்புக்களின் எண்ணிக்கையையும் பொதுவித்தியாசத்தையும் காண்க

(1989 டிசம்பர் **NEW**)

5. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாம் உறுப்பு 44, ஒன்பதாம் உறுப்பு 38 ஆகும்.

(1) முதலாம் உறுப்பு (2) பொதுவித்தியாசம்

(3) முதல்11 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க.

(1989 டிசம்பர் **OLD**)

6. ஒரு கூட்டல் விருத்தியின் 19ம் உறுப்பு 33ஆகும் அதன் முதல் 20 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 320 ஆகும்.

(1) கூட்டல் விருத்தியின் முதலாம் உறுப்பையும் பொதுவித்தியாசத்தையும் காண்க

(2) கூட்டல் விருத்தியின் ஐம்பத்தாறாம் உறுப்பு என்ன?

(1988 டிசம்பர் **OLD/NEW**)

2) இக் கூட்டல் விருத்தியின் பதினோராவது உறுப்பில் ஆரம்பித்து - 400 ஐக் கூட்டுத் தொகையாகப் பெறுவதற்கு எத்தனை உறுப்புக்கள் எடுக்கப்படல் வேண்டும்? (பொருத்தமான சூத்திரங்களைப் பயன்படுத்துக)

(1987 டிசம்பர்)

9. (1) 35 இற்கும் 160 இற்குமிடையில் 6 இன் மடங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

(2) அவற்றின் கூட்டுத் தொகையைக் காண்க.

(1986 டிசம்பர்)

10. கூட்டல் விருத்தி ஒன்றின் முதற் பதினைந்து உறுப்புக்களினதும் கூட்டுத் தொகை - 255 ஆகும். கடைசி உறுப்பு - 45 ஆகும். பின்வருவனவற்றைக் காண்க.

(1) முதல் உறுப்பு (2) பொதுவித்தியாசம்

(3) 10 வது உறுப்பு

(1985 டிசம்பர்)

11. ஒரு கூட்டல் விருத்தியின் முதல்உறுப்பும் பொதுவித்தியாசமும் முறையே 8உம் 2உம் ஆகும் இவ் விருத்தியின் முதன் 13உறுப்புக்களின் கூட்டுத்தொகை பொதுவிகிதம் $\frac{1}{3}$ஐக் கொண்ட பெருக்கல் விருத்தியின் முதல் 3உறுப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

(1) இத்தொடரின் பொதுவித்தியாசத்தைக் காண்க.

(2) 3, இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு ஆகும்?

(3) இத்தொடரின் 4ம், 10ம், 12ம், உறுப்புக்களை முறையே முதல் மூன்று உறுப்புகளாகவுடைய தொடரின் வகையைக் கூறுக?

(4) 255 ஐ கூட்டுத்தொகையாகப் பெறுவதற்கு 1 ம் உறுப்பில் ஆரம்பித்து மூலத் தொடரின் எத்தனை உறுப்புக்களை எடுக்கவேண்டும்?

(1983 டிசம்பர்)

13. கூட்டல் தொடரொன்றின் 1-ம் உறுப்பு 9உம், 7ம் உறுப்பு 27உம் ஆகும்

(1) இத்தொடரின் பொதுவித்தியாசத்தைக் காண்க

(2) 69 இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு ஆகும்?

(3) இத் தொடரில் முதல் 33 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க

(4) இத்தொடரின் 2-ம், 4-ம், 7-ம் உறுப்புக்களை முறையே முதல்மூன்று உறுப்புக்களாகவுடைய தொடரின் வகையைக் கூறுக காரணங்கள் தந்து கூறுக

(1982 டிசம்பர்)

(1) n வது உறுப்பிற்கான சூத்திரத்தையும்,
(2) முதல் n உறுப்புக்களின் கூட்டுத்தொகைக்கான சூத்திரத்தையும் a, d என்பவற்றில் எழுதுக.
(ஆ) கூட்டல் தொடர் ஒன்றின் முதல் ஆறு உறுப்புக்களின் கூட்டுத்தொகை 141 ஆகும் ஆறாவது உறுப்பு 36 எனில், தொடரின்,
(1) முதலுறுப்பு. (2) பொது வித்தியாசம்
(3) முதல் பன்னிரண்டு உறுப்புக்களின் கூட்டுத் தொகை என்பவற்றைக் காண்க?

(1991 டிசம்பர்)

3.
கூட்டல் தொடர் ஒன்றின் இருபத் தொன்றாம் உறு

(1988 டிசம்பர் OLD/NEW)

7. கூட்டல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 7.5 உம் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத் தொகை 162.5 உம் ஆகும். இக் கூட்டல் தொடரின் முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் காண்க

(1988 யூலை)

8. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாவது உறுப்பு 38 உம் பதினோராவது உறுப்பு 20உம் ஆகும்.
1) இக் கூட்டல் விருத்தியின் முதலாவது உறுப்பையும், பொது வித்தியாசத்தையும் காண்க.

1) கூட்டல் விருத்தியின் முதல் 13 உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க-
2) பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பைக் காண்க.
3) பெருக்கல் விருத்தியின் 5 வது உறுப்பைக் காண்க

(1984 டிசம்பர் Special)

12.
கூட்டல் தொடரொன்றின் 5 ம் உறுப்பு 24 ஆகும். அதன் முதல் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகை 99 ஆகும்

(1982 டிசப்பர்)

14. ஒரு தொடரின் n-ம் உறுப்பு 25- 4n ஆகும்.

[1] இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் காண்க-
[2] இது கூட்டல் தொடரா அல்லது பெருக்கல் தொடரா எனக் காரணம் தந்து குறிப்பிடுக.
[3] இத்தொடரின் -83 எத்தனையாம் உறுப்பு? இத்தொடரின் முதல் 32 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

[1981 டிசம்பர்]

---

# 3 ஆம் ஆண்டு நினைவாக

பிறப்பு:
25. 04. 1966



வீரச்சாவு:
14. 09. 1991

## வீரவேங்கை யூட்டி
## (இராசரத்தினம் ஜெயதேவி)

மணலாறு தன்னில் களம் காண என்று
மகிழ்வோடு சென்று மாவீரரான
வரலாறு இன்று வருடங்கள் மூன்றாய்
வருகின்ற போதுமெம்துயர் தீரவில்லை;

14. 09: 1991 அன்று மணலாற்றில் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய யூட்டி அவர்களுக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வேம்படி, உனது பிரிவால் துயருறும்
உடுத்துறை; (9292) குடும்பத்தினர்

---

# பிரதமரின் பாதுகாப்பு பிரிவு
# டி. ஐ. ஜியாக குணவர்த்தன

(கொழும்பு)
பிரதமர் சந்திரிகாவின் பாதுகாப்பு பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபராக காமினி குணவர்த்தனா பதவி ஏற்றுள்ளார். இவர் 1990இல் அமெரிக்கஹாவாட்பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருந்த போது வேலை நீக்க உத்தரவு கிடைத்தது.

வேலை நீக்க அறிவித்தலை எதிர்த்து குணவர்த்தனா அரச சேவை கமிஷனுக்கு அப்பீல் செய்தார். வேலை நீக்க அறிவித்தலை வாபஸ் பெறுமாறு அரச சேவை கமிஷன் கேட்டுக் கொண்டும் அரசியல் தலையீட்டினால் இவருக்கு மீண்டும் பதவி வழங்கப்படவில்லைகுணவர்த்தனா கடைசியாக மத்தியபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினார்

---

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ் கோட்டம்
## முக்கிய அறிவித்தல்

மாவட்ட பொதுச் சபையின் தீர்மானப்படி தியாகி திலீபன் நினைவு நாள் விழாவிற்கான நிதியை சகல பொதுச்சபை உறுப்பினர்களும் 16 - 09 -94 க்கு முன் செம்மணி வீதி. நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில் செலுத்தும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
(சி/10332) யாழ் கோட்டம்

---

# சந்திரிகாவின் சமரச முயற்சிகள் ஐ.தே.க. குழப்பலாம்
## முன்னாள் விமானப்படைத் தளபதி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டு வரும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சியை தனது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வைத்து கொண்டு ஐக்கிய தேசிய கட்சி குழப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக முன்னாள் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஹறி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் இவ் நடவடிக்கை புதிய அரசாங்கத்தின் பிரதமருக்கு ஓர் பின்னடைவு நிலையை ஏற்படுத்தி இருப்பதாக சுட்டிக் காட்டிய அவர் தற்போது முப்படைகளின் நடவடிக்கையை கட்டுப் படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருப்பதாகவும் எனவே எதிர் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெறும் மோதல் உச்ச நிலை அடைந்தாலும் அது குறித்து ஆச்சரியப்படுவதற்கு இல்லை என தெரிவித்தார்.

சென்ற வாரம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற யுத்தம் இந் நிலையை தான் எடுத்துக் காட்டியதாகவும் இது குறித்து புதிய அரசாங்கம் ஓர் பின்னடைவை கொள்ளாது தொடர்ந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்ல வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பழிவாங்கப்பட்டோர் விபரம் சேகரிக்க அமைச்சுகுழுக்கள்

(கொழும்பு)
1977 ம் ஆண்டிற்கு பின்னர் அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான ஒவ்வொரு அமைச்சும் தனித்தனி குழுக்களை அமைத்துள்ளன. அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் கடமையாற்றி அரசியல் காரணங்களுக்காக பதவி இழந்தவர்கள், பதவி உயர்வு மறுக்கப் பட்டவர்கள், மற்றும் சலுகை இழந்தவர்களின் பிரச்சினைகள் பற்றி இக் குழுக்கள் ஆராயும் இக் குழுக்களுக்கு பிரதி அமைச்சர்கள் தலைமை வகிப்பார்கள். இவ்வாறு பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி ஆலோசனைகள் சிபார்சுகள் என்பவற்றை இக் குழுக்கள் சிபார்சு செய்யும் என்றும், மீண்டும் வேலை வழங்குவது, தேவையான நிதி வளங்களை செலவிடுவது போன்றவற்றை சிபார்சு செய்து அமைச்சரவைக்கு தெரிவிக்கும் படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிந்தனைக்கு..

சமாதானத்தை நேசிக்கிறோம்
ஆனால் எந்த விலை கொடுத்தும்
அதைப்பெற சித்தமாயில்லை
துப்பாக்கியை விட அடிமை விலங்கு
பயங்கரமானது.

-டச்லஸ் ஜெரோல்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 14-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் 05

## அரசால் இயலுமா?

ஆரம்ப சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குப் பிரதிநிதிகளை நியமிக்குமாறு சிறிலங்கா பிரதம மந்திரி கேட்டதற்கிணங்க தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் தமது தரப்பில் நான்கு பிரதிநிதிகளை நியமித்துள்ளார். இது குறித்து தலைவர் பிரபாகரன் சிறிலங்காவின் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ''ஆரம்ப பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு பிரதிநிதிகளைநியமிக்குமாறுகேட்டிருந்தீர்கள். பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு கீழ்க்காணும் அதிகார பூர்வமான பிரதிநிதிகளை நாம் நியமித்திருக்கின்றோம்'' எனக் குறிப்பிட்டதோடு நான்கு பேரின் பெயர் பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் இந் நடவடிக்கையானது, இனப் பிரச்சினைத் தீர்விற்கு அரசாங்கம் எடுக்கும் முன்னேற்ற கரமான நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரவேற்பு எப்பொழுதும் இருக்கும் என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. இதனை உறுதிப்படுத்துமாப்போன்றே தலைவர் பிரபாகரன் எழுதியுள்ள கடிதத்தில் அரசாங்கத்தின் நல்லெண்ண நடவடிக்கைக்கும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தனது கடிதத்தில் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகையில் ''பொருளாதாரத்தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாண மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதை நாம் வரவேற்கின்றோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாகவே இருக்கின்றோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண விழையும் உங்களது முயர்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

அதாவது தலைவர் பிரபாகரனின் இக்கடிதமானது இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளுக்கும், தமிழ் மக்களின் அன்றாட நெருக்கடிகளைத் தீர்ப்பதான விடயத்திலும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு போதும் தடையாக இருக்க மாட்டாது என்பதை உணர்த்துவதாகவுள்ளது. இந் நிலையில்,

# இவ்வருடத்தில் மட்டும் 90 பேர் இராணுவ நடவடிக்கையில் மரணம்

### யாழ் அரச அதிபர் தகவல்

(கொழும்பு)

அண்மைக்கால வன்முறைகளில் சுமார் 7542 பொது மக்கள் குடாநாட்டில் இறந்துள்ளனர். 3000 பேர் ஊனமுற்றுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிந்துவிட்டன. இவ்வருடத்தில் இதுவரை மட்டும் 90 பேர் இறந்துள்ளனர். 233 பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு யாழ் அரச அதிபர் அண்மையில் இலங்கை வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். அப் பேட்டியில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது.

கேள்வி; யாழ்ப்பாண சனத்தொகை குறித்து கூறமுடியுமா?

பதில்: 81 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட இறுதி கணக்கெடுப்பில் சனத்தொகை 8 லட்சமாக இருந்தது நாம் எமது கிராமசேவகர் மூலமாகவும் புள்ளி விபரவியலாளர் மூலமாகவும் எடுத்த கணிப்பில்சுமார் ஏழரைலட்சம் மக்கள் இப்போதுள்ளனர்.

கேள்வி: இடம் பெயர்ந்தோர் எவ்வளவு?

பதில்: சுமார் 264,335 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

கேள்வி: இவர்களில் யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்தோர் எவ்வளவு, வெளிமாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தோர் எத்தனை பேர்?

பதில்; யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்தோர் சுமார் 68 ஆயிரம் குடும்பங்கள். சுமார் 6 ஆயிரம் குடும்பங்கள் வெளிமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

கேள்வி: பொதுமக்கள் மற்றும் சொத்துக்களுக்கு வன்முறையினால் ஏற்பட்டசேதம் என்ன?

பதில்; எம் கணிப்பின்படி சுமார் 7542 பேர் இறந்துள்ளனர். எத்தனையோ கோடி பெறுமதியான சொத்து சேதமடைந்துள்ளது. மூவாயிரம் பேர் ஊனமுற்றுள்ளனர் இவ்வருடத்தில் மட்டும் 90 பேர் இறந்துள்ளனர். 233 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கேள்வி: இவற்றால் வருமான பாதிப்பு எப்படி உள்ளது?

பதில்: விவசாயம் எம்மாவட்டத்தில் 65 ஆயிரம் பேரால் செய்யப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது சில பகுதிகளில் மக்கள் இடம்பெயர்வால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது அத்துடன் தேவையான வேளையில் உரம், கிருமி நாசினி, விதைகள் என்பன கிடைப்பதில்லை விலையும் அதிகம் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள் சுமார் 24 ஆயிரம் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன இதைவிட கட்டிட தொழில், தச்சு, பொறியியல், மின்சாரத்தொழில்களுடன் சம்பந்தப்பட்ட சுமார் 10,800 குடும்பங்கள் தொழிலின்றி உள்ளன.

## சந்தை பொருளாதாரமுறை புதிய அரசு கைவிடாது

### அமைச்சர் உறுதியளிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் சந்தைப் பொருளாதார முறையிலிருந்து விலகிச் செல்லாது என்றும், வெளிநாட்டு முதலீடுளை நேரடியாக அது வரவேற்கிறது என்றும், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி குணரத்தின கூறியுள்ளார்.

ஆடைத் தயாரிப்பு தொழிற்துறைக்கான உற்பத்தி நிர்வாக பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் இலங்கை கைத்தொழில் மயநாடு என்ற அந்தஸ்தை அடைய வேண்டும். அதுவே அரசாங்கத்தின் குறிக்கோள் என்றும் தெரிவித்தார்.

## அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் பற்றி ஆட்சேபனை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து முற்போக்கு ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்திற்குக் தெரிவாகி உள்ள மகிந்த அமரவீரவின் தெரிவு தேர்தல் சட்டத்திற்கு முரணானது என்றும் அதனால் அவரின் தெரிவை செல்லுபடியற்றதாக்கவேண்டும் என்றும் கோரி அதே மாவட்டத்தைச் சேர்ந்த டிங்கிரி அலெக்ஸாண்டர் என்ற வேட்பாளர் உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இத்தேர்தலின்போது வாக்குகள் எண்ணுவதில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளது என்றும் அது 1981ஆம் ஆண்டு முதலாம் இலக்க தேர்தல் சட்டத்திற்கு அமைய இடம் பெறவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

## வன்செயலால் பாதிப்புற்ற 50 பேருக்கு நிவாரணம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிகழ்ந்த வன்செயல்களால் பாதிப்புற்றவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப் பணித்துள்ளார். கையாக உதவி கோரி விண்ணப்பித்தோரில் 50 பேரின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கான காசோலைகளை தற்போது கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரசாங்க அதிபரிடம் கையளிக்குமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட

## திருக்குறள் போட்டி

வாரிவளவு நல்லியக்கச் சபையினால் நடாத்தப்படும் காரை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ற்ரன் கல்லூரியிலும், 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு

# ஜனாதிபதி தேர்தலில் ஐவர் போட்டியிடுவர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐந்து முனைப் போட்டிக்கு வாய்ப்பிருப்பதாக 'லங்காதீப' தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சியின் ஒஸி அபேகுணசேகர அணி ஆகியன போட்டியிடத் தீர்மானித்துள்ளன. மேலும் சிறிலங்கா முற்போக்கு முன்னணியும், ஜே. வி. பியின் மார்க்சிஸ்ட் பிரிவும் இணைந்த அணியும், தமிழர் தரப்பு வேட்பாளர் ஒருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பிருப்பதாக லங்காதீப மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி தேர்தல் குறித்து வார இறுதியில் பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் பற்றிய உத்தியோக பிரகடனத்தை தேர்தல் ஆணையாளர் இவ் வார இறுதியில் வெளியிடவுள்ளார் என தெரிய வருகிறது.

ஆகஸ்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட தேர்தல் இடாப்புக்களே ஜனாதிபதி தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட-கிழக்கு புனர்வாழ்வு விசேட செயலணி நியமனம்

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான விசேட செயலணி நியமிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையிலான இச் செயலணி நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், கல்வி, மின்சக்தி, எரிபொருள் போன்ற பல்வேறு விடயங்களை ஆராய்ந்து அதற்குரிய நிவாரணங்களை வழங்க சிபார்சுகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.

இச் செயலணியில் அமைச்சர்கள் அனுருத்த ரத்வத்த, ரத்தினசிறி விக்கிரமநாயக்க, எம். எச். எம் அஷ்ரப், இந்திக்கா குணவர்த்தனா, எஸ். பி. திசாநாயக்க, லக்ஸ்மன் கதிர்காமர், றிச்சாட் பத்திரான, சிறிமணி அத்துலத்முதலி ஆகியோர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இச் செயலணியின் முதலாவது கூட்டம் எதிர்வரும் திங்கட் கிழமை நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

## இனவாதத்தை வளர்க்க ஐ.தே.க மறைமுக முயற்சி?

(கொழும்பு)

சிங்கள இனவாத அலையொன்றை ஐ தே.க. மறைமுகமாக வளர்த்து வருவதாகவும் இதற்கு கணிசமான அளவு உதவியை பௌத்த பீடங்கள் மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சி தான் விதைத்த இனவாதத்தை மேலும் ஓர் உச்ச நிலைக்கு கொண்டு செல்லும் நோக்குடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதும் நோக்குடன் பல போராட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டங்களையும் வேறு தொழிற் சங்க நடவடிக்கைகளையும்மேற்கொள்ளஐக்கிய தேசியக்கட்சி ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(நி) (88)

## விபத்தில் பலி

வெளிச்சமின்றி இரவில் வீதியால் வந்த லொறியொன்றால் மோதுண்ட சைக்கிள் பயணி ஒருவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது.

பளையைச் சேர்ந்த கே. வீரப்பா (வயது 49) என்ப

இயக்கம் ஒரு போதும் தடையாக இருக்க மாட்டாது என்பதை உணர்த்துவதாகவுள்ளது. இந்நிலையில், இவ்விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரசாங்கமே எடுக்க வேண்டியுள்ளது.

ஆனால் அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று ஒரு சகஜ நிலை உருவாகவும், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காணவும் அது எடுக்கும் நடவடிக்கைகள் போதுமா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் தலைவர் பிரபாகரன் 10 பொலிஸாரின் விடுதலை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் ‘யுத்த நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் தயார், எனக் கூறியிருந்தாராயினும் தலைவர் பிரபாகரனுக்கு பிரதம மந்திரி சந்திரிகா குமாரதுங்கா எழுதியுள்ள கடிதத்தில் சமாதானப் பேச்சுக்கள் பற்றி மட்டுமே குறிப்பிட்டமையே இக்கேள்வி எழுவதற்கான காரணமாகும்.

இதனைத் தலைவர் பிரபாகரனும் பின்னர் தான் எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளதோடு தமது வருத்தத்தையும் தெரிவித்திருந்தார். அத்தோடு போர் நிறுத்தத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டி இவ்விடயத்தில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா அவசர சிரத்தை கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

போர் நிறுத்தம் சமாதானப் பேச்சிற்கு அவசியம் என்பது பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா விளங்கிக் கொள்ள முடியாத விடயம் அல்ல. ஏனெனில் போர் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மறுபுறம் சமாதானப் பேச்சுக்கள் ஒரு நல்லெண்ண சூழ்நிலையில் நடைபெறுவது என்பது சாத்தியமானதொரு விடயமல்ல.

ஒருபுறம் போரின் போக்குகள் பேச்சுவார்த்தையில் அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தக் கூடும் என்பதோடு மறுபுறம் பேச்சிற்கான சூழ்நிலையையுமே கெடுத்துவிடக் கூடியதாகும். அத்தோடு பிரச்சினைக்கு உரிய இரு தரப்பினரும் நேரடியாகவே பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது அவர்களின் போக்குவரத்து, பாதுகாப்பு என்பவற்றிக்கு மூன்றாம் தரப்பு ஒன்றின் தேவையும் ஏற்பட்டுவிடக் கூடும்.

இவ்வாறானதொரு நம்பிக்கையற்ற சூழ்நிலை பேச்சுவார்த்தையில் முன்னேற்றகரமான முடிவுகள் எதையும் எடுப்பதற்கு உதவப் போவதில்லை. தற்பொழுது பேச்சுவார்த்தையில் அவநம்பிக்கை கொண்டுள்ள இராணுவம் யுத்த நிறுத்தம் போன்றதொரு கட்டுப்பாடு அற்ற நிலையில் தமது நடவடிக்கைகள் மூலம் இப்பேச்சுவார்த்தைகளையே குழப்பிவிடக் கூடும்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்று காணப்படவேண்டும், பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டுமாயின் அதற்குமுன் யுத்த நிறுத்தம் ஒன்று அவசியமானதாகும். இல்லாது போனால் சமாதானமுயற்சிகளின் முடிவானது வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது போல் ஆகிவிட்டாலும் ஆச்சரியப்பட எதுவுமிருக்காது.

---

னடியாக நடவடிக்கை எடுக்குமாறும் புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப் பணித்துள்ளார்.

இந் நிவாரணக் கொடுப்பனவின் முதலாவது நடவடி

---

யுள்ள யாழ் அரசாங்க அதிபரிடம் கையளிக்குமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (11)

---

18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் நாவலர் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

---

# சீனி மூடைகள் எடை குறைவு முஸ்லிம் வர்த்தகர் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு வந்து சேர்ந்த சீனி மூடைகளில் எடை குறைவாக இருந்தது தொடர்பாக சீனி கொள்வனவு செய்திருந்த முஸ்லிம் வர்த்தகரிற்கு எதிராக அரச அதிபர் விசாரணையை மேற்கொள்ளவுள்ளார்.

அண்மையில் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு யாழ் மாவட்டத்திற்கு தருவிக்கப்பட்டிருந்த சீனி மூடைகளில் எடை குறைவாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்படி எடை குறைவு தொடர்பாக சீனி கொள்வனவு செய்த முஸ்லிம் வர்த்தகரிற்கு எதிரான விசாரணைகளை நடாத்துவதற்கு தேவையான பூர்வாங்க தகவல்கள் சேகரிக்கப்படுவதாக கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(88)(நி)

# க.பொ.த.(சா/த) பரீட்சை டிசம்பர்-5 ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த. (சா/த) பரீட்சைகள் டிசம்பர் மாதம் 5-ந் திகதி தொடக்கம் 14-ந் திகதி வரை நடைபெறுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது

நாடளாவிய ரீதியில் இதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது

# விமானக் கொள்வனவு ஆவணங்கள் மர்ம மறைவு

(கொழும்பு)

கேள்விப்பத்திரம் எதுவுமின்றி 250 கோடி ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட அமெரிக்க தயாரிப்பு ‘‘லொக்கீ டிசி 130’’ ரக விமானப்படை விமானம் தொடர்பான கொள்வனவு ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டதாக தெரிய வந்துள்ளது.

இக்கொள்வனவு தொடர்பாக விமானப்படைத் தளபதி மேற்கொண்ட விசாரணையின் போது இது போன்ற விமானங்கள் தற்போது தேவையில்லை என்றும் இக்கொள்வனவு எதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து கண்டு பிடிக்கமுடியாது இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இக்கொள்வனவு தொடர்பான விபரங்கள் பெற சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விமானப்படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரியும் கடிதம் எழுதியுள்ளனர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.09.14 புதன் இரவு

- 08.01 - குயிலோசை - ‘‘மானத் தமிழ் மறவன்’’ சங்கிலியன் கூத்தின் தொடர்ச்சி
- 08.20 - ஏர்முனை - ‘‘வாழைத்தோட்டத்தில் தம்பிப்பிள்ளையர்’’ தனிநடிப்பு
- 08.30 - செய்திகள்
- 08.40 - நாடகம் - ‘‘எல்லாளன்’’

### 1994.09.15 வியாழன் காலை

- 07.02 - மாவீரவணக்கம்
- 07.15 - விடுதலை கீதங்கள்
- 07.30 - செய்திகள்
- 07.35 - பத்திரிகைச் செய்திகள்
- 07.40 - தியாக தீபம் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்புநிகழ்ச்சி ‘‘திலீபனின் தியாகம்’’

---

கொள்ளப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது.

இதே வேளை இந் நடவடிக்கையை தீவிரப்படுத்

---

பளையைச் சேர்ந்த கே. வீரய்யா (வயது 49) என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். [86]

---

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி 9 இலங்கையர் பலியாகினர்

டுபாயில் கட்டார் எனும் இடத்தில் நீச்சல் தடாகம் ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த 9 இலங்கையர்கள் மூழ்கி பலியானதாகவும் இதில் எட்டுப் பேரது சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நீச்சல் தடாகத்தில் குளித்துக் கொண்டிருந்த போது கால்வாயூடாக பெருமளவு நீர் திடீரெனப் பாய்ந்தது. இதனால் இவர்கள் நீரால் அடித்துச் செல்லப்பட்டனர் இவர்களில் எட்டுப் பேரது சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டதாகவும் மற்றைய சடலத்தை ஹெலிகொப்ரர்கள் தேடிவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

சம்பவதினம் 15 பேர்ஒன்றாகக் குளிக்கச் சென்றதாகவும் அப்போது மழைக்காலமாகையால் தடாகத்தில் நீர் நிரம்பியிருந்தது. பெருவெள்ளத்தின் காரணமாக நீர்பாயத் தொடங்கியது. இதனால் ஒன்பது பேர் நீரோட்டத்துடன் அள்ளுண்டு சென்றனர். இச்சம்பவம் அங்குள்ள இலங்கையர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என தெரியவந்துள்ள போதிலும் பலியானோர் பற்றிய பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# புலனாய்வு பிரிவுகள் தொடர்ந்தும் ஐ.தே.க. வசம்

## புதிய அரசிற்கு நெருக்கடி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு புலனாய்வு சேவை விசேட விசாரணைப் பணியகம், குற்றப் புலன் விசாரணைப் பிரிவு போன்ற இரகசிய புலன் விசாரணைப் பிரிவுகள் இன்னமும் ஐக்கிய தேசியக் கட்சியினர் வசமே உள்ளது என கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் புலனாய்வு தொடர்பாக இவற்றிடமிருந்து எவ்வித உதவியையும் பெற முடியாதநிலையில் இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது

# பிரதம மந்திரியாக சிறிமாவோ தெரிவாவார்?

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்திருப்பதால், வெற்றிடமாகும் பிரதமர் பதவிக்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவாகலாம் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும், அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னரான சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவிக்கே திருமதி சிறிமா பண்டாரநாயக்கா விரும்புவதாகவும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## போர் நிறுத்தத்திற்கு (முன்பக்கத் தொடர்ச்சி)

# நேரடிப் பேச்சுக்களையே விரும்புகிறோம்

கேள்வி: உங்களுக்கும் அரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடக்கும் பட்சத்தில் ஏனைய தமிழ்க் குழுக்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள இணங்குவீர்களா?

பதில்: இந்தத் தமிழ்க் குழுக்கள், தனித்தும் கூட்டாகவும் அரசுடன் பேச்சுக்களை நடத்திவருகின்றன. அதுபற்றி எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால், தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார்? தமிழ் மக்களின் உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடி வருபவர்கள் யார்? என்பதை இந்தப் புதிய அரசாங்கம் உணர்ந்திருக்கும் என்றே நான் நம்புகிறேன். எனவே, தமிழரின் உண்மையான பிரதிநிதிகளாகிய எம்முடன் அரசு நேரடியாகப் பேசுவதையே நாம் விரும்புகிறோம் அந்தப் பேச்சுக்கள்தான் பயனுள்ளதாக, அர்த்தமுள்ளதாக அமையும்

# சிங்களத் தலைமையே தமிழரை ஏமாற்றியது

கேள்வி: உங்களுக்கும் பிரேமதாசா அரசுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளை நீங்கள் பாதியில் முறித்துவிட்டீர்கள். எனவே, அரசு உங்களை நம்பி ஏன் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் இறங்கவேண்டும்?

பதில்: பிரேமதாசா அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களை நாங்கள் முறித்துவிட்டோம் எனக் கூறுவது தவறு.

நாங்கள்பேச்சுக்களைஇடையே முறிக்கவில்லை. கிட்டத்தட்ட இரண்டுஆண்டுகளாகப்பேச்சுக்கள்தொடர்ந்துநடைபெற்றிருக்கிறது. ஆனால் இந்த இரண்டுஆண்டுகாலப்பேச்சுக்களின் போது தமிழ்மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் எதுவுமே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. பிரேமதாசா அரசு தமிழரின் தேசிய பிரச்சினை சம்பந்தமாக எவ்வித தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இதனால் பேச்சுக்கள் அர்த்தமில்லாமல் இழுபட்டு இறுதியில் செயலிழந்துபோனது. இதுதான் உண்மையில் நடந்தது. நாங்கள் தான் நம்பிக்கைத் துரோகம் இழைத்துவிட்டதாகக் கூறப்படுவதெல்லாம் வெறும் விசமப் பிரச்சாரமே.

எல்லாப் பேச்சுவார்த்தைகளின்போதும் நாம் எமது மக்களின் நலன்களையேமுதன்மைப்படுத்தி வந்திருக்கிறோம். எமது மக்கள்சமாதானமாக, கௌரவமாக, உரிமைகள்பெற்று வாழ வேண்டும் என்பதையேவலியுறுத்தி வந்திருக்கிறோம். சிங்கள அரசுகள், எமது மக்களின் நியாயமான, அடிப்படையான, உரிமைகளை ஏற்று. நீதி வழங்க மறுத்ததால்தான் பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. காலம்காலமாக, தமிழர்கள்தான் சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டுவந்திருக்கிறார்கள். ஒப்பந்தங்களை முறித்து, உடன்பாடுகளை உடைத்து, சிங்கள அரசுகள்தான் தமிழர்களுக்கு நம்பிக்கைத்துரோகம் இழைத்து வந்திருக்கிறது. இந்த வரலாற்று உண்மையை எவரும் மறுக்க முடியாது. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கு நீதிவழங்க, புதிய அரசாங்கம் உறுதிபூண்டிருந்தால், விடுதலைப் புலிகள் ஏமாற்றிவிடுவார்கள் என அச்சம்கொள்ளத் தேவையில்லை.

# பூநகரிப் பாதையை அரசு திறந்துவிடலாம்

கேள்வி: யாழ்ப்பாணத்திற்கும் பெருநிலப்பகுதிக்குமிடையே போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்படுவதற்கு புலிப்படையினர் தடையாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதற்கு உங்கள பதிலென்ன?

பதில்; இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை எதுவுமில்லை. யாழ். குடாநாட்டிற்கும் வட மாநிலத்திற்கும் இடையே ஆனையிறவு, பூநகரி என்ற இரண்டு தரைப்பாதைகள் உள்ளன இந்த இரண்டு பாதைகளையும் சிங்கள இராணுவம் மூடிவைத்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை முற்றுகையிடும் நோக்கில் இந்தப் பாதைகள் ஊடாக மக்கள் போக்குவரத்தை இராணுவம் தடுத்துவைத்திருக்கிறது.

அதனால்தான், மக்கள் கிளாலிக் கடற்பாதை வழியாக பயணம்செய்து வருகிறார்கள். இந்தக் கடற்பயணத்தை தடுப்பதற்காக சிங்கள ஆயுதப்படைகள் நடத்திய படுகொலைகள் ஏராளம்.

கிளாலிக் கடற்பாதை வழியாக, எமது மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக, எமது கடற்புலி போராளிகள் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். எத்தனையோ வீரசாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

இன்று கிளாலிக் கடற்பரப்பு எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. எமது போராளிகளின் பாதுகாப்புடன் மக்கள் இந்தப் பாதை வழியாகப் பயமின்றி பயணம் செய்து வருகிறார்கள்.

ஆனால் தரைப் பாதை ஒன்றைத் திறந்து, எமது மக்களதும், வாகனங்களதும், போக்குவரத்தை இலகுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் நாம் அதை வரவேற்போம். இராணுவ சோதனைகள், கெடுபிடிகள் எதுவுமின்றி மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். இந்த வகையில் பூநகரியில் தரித்து நிற்கும் இராணுவத்தை வாபஸ்பெற்று சங்குப்பிட்டிப் பாதையை அரசாங்கம் திறந்துவிடுமானால் எமது மக்கள் அதனைப் பெரிதும் வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

# பிரச்சினை தீரும்வரை தேர்தலில் பங்குபற்றோம்

கேள்வி: உண்மையில் நடந்த பாராளுமன்றத்திற்கானதேர்தலில் நீங்கள்கலந்துகொண்டிருக்கலாமே? ஏன்போட்டியிடவில்லை?

பதில்: தமிழரின் தேசிய பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிட்டவேண்டும், அதன்பின்னரே, நாம் தேர்தலில் பங்குகொள்வது பற்றி சிந்திக்கலாம்.

நீண்டகாலமாகவே பாராளுமன்ற அரசியலில் தமிழர்கள் பங்குபற்றி வந்திருக்கிறார்கள், ஆனால் பாராளுமன்ற அரசியல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறிவிட்டது அதுமட்டுமல்லாமல், பாராளுமன்றம் மூலமாகவே தமிழ் மக்களுக்கு விரோதமான பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன, காலம்காலமாக, சிறிலங்கா பாராளுமன்றம் பெரும்பான்மைச் சிங்களமக்களின் நலன்களையும், அபிலாசைகளையுமே நிறைவு செய்து வந்திருக்கின்றது தமிழரின் நலன்களை நசுக்கிவந்திருக்கிறது

இந்தசூழ்நிலையில், தமிழர்கள்மீண்டும் பாராளுமன்றம் செல்வதில் எவ்வித பயனும்ஏற்படப்போவதாக நாம் கருதவில்லை. அதுவும், வடகிழககில், நியாயமற்ற முறையில், சட்டவிரோதமாக நிகழ்ந்த தேர்தலில் நாம்பங்குகொள்ள விரும்பவில்லை.

# முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் வரலாம்

# படையினர் இன்றைய நிலையிலிருந்து பின்வாங்குவது தற்கொலைக்கு சமன்

## சண்டே ஐலண்ட் அரசியல் விமர்சகர் தெரிவிப்பு

இராணுவம் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்து பின்வாங்கிச் செல்வதானால் படையினர் விலகிச் செல்லும் பகுதிகளை இராணுவ தாக்குதலற்ற பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டு அவற்றை நடுநிலையான மூன்றாம் தரப்புகண்காணிக்க வேண்டும் இவ்வாறு சண்டே 'ஐலண்ட்' அரசியல் செய்தியாளர் தாரகி குறிப்பிட்டுள்ளார் இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது.

படையினரின் தற்போதைய முக்கிய மார்க்கமாக உள்ள கடல் மற்றும் ஆகாய வழிகளும் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகுவதால் பெருமளவிலான பிரதேசம் முகாமைசூழ இருப்பது முகாம்களின் பாதுகாப்பை ஓரளவு உறுதிசெய்கிறது. இந்நிலையில் பேச்சுவார்த்தைகளின் போது தற்போது படையினர் உள்ள கிராமங்களுக்கு தமிழ் மக்கள் மீண்டும் சென்று குடியேற அங்கிருந்து படை அகற்றப்படவேண்டும் என புலிகள் தரப்பில் கோரப்படின் இது நிச்சயமாக படையினருக்கு தற்கொலைக்கு ஒப்பான செயலாகவே இருக்கும்.

---

## மருத்துவ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சிர்மாறன் எழுதிய ''சிலநோய்களும் சில ஆலோசனைகளும்'' மருத்துவநூல் வெளியீட்டு விழா இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

---

## வால்நட்சத்திர

பூமியின் சுற்றுகைக்கு வெளியிலுள்ளன. இந்த துண்டுகள் தொடர்ந்தும் இப்பாதையிலேயே சென்று கொண்டிருக்குமானால் அவை பூமியோடு மோதமாட்டா எனவும் அவதானிகள் கூறுகின்றனர் ஆனால் ஒரு நீண்ட நோக்கில் எதுவும் உறுதியாக கூறமுடியாது எனவும் அவர்கள் கூறுகின்றன!.

---

## உடன்பாடு

சியல் நிலை பற்றி குறிப்பிட்ட ஜோர்ஜ் ஆர்னி தமிழர்களின் நியாயமான அபிலாசைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கும், இது விடயத்தில் அரசின் நிலைப்பாட்டிற்கும் இடையே இடைவெளி இருக்கும்என்றே கருதப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

---

## இராணுவ

ஆரம்பிததனர். ஆனால் இதை அறிந்துகொண்ட புலிகள் தமது இராணுவ மூலோபாயத்தை மாற்றிக்கொண்டுவிட்டனர்.

மற்றும் ஒரு சிறிய குழுவினரும் விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சை இந்த நேரத்தில் நடத்துவதை எதிர்க்கின்றனர். விடுதலைப் புலிகள் பலமற்று இருக்கும் போதே அரசு அவர்களுடன் பேசவேண்டும் என அவர்கள் வாதிடுகின்றனர்.

இதே சமயம் புதுடில்லி விடுதலைப் புலிகளுக்கு எதிராக கொழும்பு எடுக்கும் அரசியல் இராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதாக கூறுகிறது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதை

---

## தியாகி

மேலும் இந்நாட்களில் மாணவர்கள் பாடசாலைகளில் காலையில் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி 30 நிமிட நேர நினைவு நிகழ்வுகளை ஒவ்வொரு நாளும் நடத்துமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது. மேற்படி பதினொரு நாட்களில் ஒரு நாளில் வசதியைப் பொறுத்து காலையில் ஆரம்பித்து பாடசாலையில் முழுநேர நினைவு நிகழ்வுகளை நடத்துமாறும் பாடசாலைகளில் சிரமதான வைபவங்களையும் பாடசாலை அமைந்துள்ள வட்டத்தில் தெரிக்கப்பட்ட ஒரு இடத்தில் நடத்தப்படுகின்ற அடையாள உண்ணாவிரதத்தில் ஒரு நாள் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளுமாறும் இறுதி நாளான 26 ஆம் திகதி கோட்ட மட்டத்தில் நடத்தப்படுகின்ற நினைவு நாள் நிகழ்வுகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்ளுமாறும் மாணவர் அமைப்பு மேலும் கேட்டுள்ளது.

---


## கண்ணீர் அஞ்சலி

### கலாகேசரி தம்பித்துரை

அண்மையில் இந்தியாவில் காலமான முன்னாள் சித்திரப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் நமது மன்ற தொடக்க கால உபதலைவருமான சிற்பக் கலைஞர் கலாகேசரி தம்பித்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

வட-இலங்கை நுண் கலை மன்றம்,
(சி-10333) கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### முத்து செல்லத்துரை

முத்து செல்லத்துரை 13-9-94-ல்காலமானார். இவர் மன்னாரைப் பிறப்பிடமாகவும் குருநகர் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாவார் இவர் ரீட்டாவின் அன்புக்கணவரும், தேவி, தர்மா, புஸ்பா, ராஜா, ஜெசி, றொஜி, பவா ஆகியோரின் அன்புத்தந்தையும், றொணி, (பிரான்ஸ்), டக்ளஸ் (டென்மார்க்), குணம் (பேசாலை, மல்லிகா (பிரான்ஸ்), ரவி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், கலிஸ்டா, காமல், இரிசா

# முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் வரலாம்

கேள்வி: நான் அண்மையில் புத்தளத்திலுள்ள முஸ்லிம் அகதி முகாம்களுக்குச் சென்றிருந்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து உங்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள். நான் பேசிய அனைவருமே தாங்கள் யாழ்ப்பாண மக்களுடன் நேசமாகவும் பாசமாகவும் வாழ்ந்ததாகவும் கூறி வேதனைப்பட்டார்கள். தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டால் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வரவே விரும்புவதாகவும் கூறினார்கள். சுமுகமான நிலைமை வந்தால் இந்த மக்களை அவர்களது சொந்த ஊருக்கு அதாவது யாழ்ப்பாணத்திற்கு வர அனுமதிப்பீர்களா?

பதில்: யாழ்ப்பாணம் இந்த மக்களின் சொந்த மண். துரதிஷ்டவசமாக சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இந்த மக்கள் அகதிகளாகவேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு நாம் வருந்துகிறோம்.

ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால், இந்த மக்கள் யாழ்ப்பாணம் திரும்பிவருவதை நாம் அனுமதிப்போம்.

போர் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் மூன்று லட்சம் தமிழ்மக்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தில், குறிப்பாக தீவுப் பகுதி மற்றும் வலிகாமம் வடக்கில் இராணுவம் குடியிருப்பு நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் இந்த மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர். இந்த தமிழ் அகதிகளில் ஒரு கணிசமான தொகையினர் முன்பு முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடங்களில் தஞ்சம் புகுந்து இருக்கிறார்கள். சிங்கள இராணுவம் தான் ஆக்கிரமித்துக் கொண்ட குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேறுமாயின் தமிழ் அகதிகள் தமது கிராமங்களுக்கு திரும்பிச் செல்ல வசதி ஏற்படும். அப்படியான ஒரு சுமுக சூழ்நிலை ஏற்பட்டால் அகதிகளாகவுள்ள முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் திரும்பி வர நாம் அனுமதிப்போம்.

# நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு வழி

கேள்வி: நாடு எங்கும் -வடக்கிலும்சரி கிழக்கிலும்சரி தெற்கிலும் சரி- இந்தப்போருக்கு முடிவு ஏற்படவேண்டும், சமாதானம் ஏற்பட வேண்டும்என்ற சிந்தனை இப்போது மேலோங்கி நிற்கின்றது. இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் தெற்கில்வாழும் சிங்களமக்களுக்கு- அரசியல்வாதிகளைவிடுங்கள் சாதாரணசிங்கள பெருங்குடி மக்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?

பதில்: சாதாரண சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை சமாதானத்தையே விரும்புகிறார்கள், என்பது எமக்கு நன்கு தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும் அதனையே நிரூபித்துக்காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதையே விரும்புகிறோம். இன்று சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர். எனவே, போர், ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும்.

யார் இந்தப் போரை தமிழ்மக்கள்மீது திணித்தார்களோ அவர்களே இந்தப் போருக்கு முடிவுகட்ட முன்வரவேண்டும்.

போர் மூலம், இராணுவ அடக்குமுறை மூலம் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என்பதனை சிங்கள தேசம் உணர்ந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதன் மூலமே இன்றைய இன நெருக்கடிக்கு தீர்வு காணலாம். சமாதான வழிமூலமே இதனைச் சாதிக்கலாம். இதனைசிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கும் இராணுவ வாதிகளுக்கும் சிங்கள மக்களே உணர்த்தவேண்டும்.

நாம் சிங்கள மக்களை நேசிக்கிறோம். நாம் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்கள் அல்லர். சிங்கள, தமிழ்மக்களுக்கு மத்தியில் எழுந்த முரண்பாடுகளுக்கும், பகைமைக்கும் இனவாத சக்திகளே காரணம். இந்த இனவாத சக்திகளை சிங்கள மக்கள் இனம்கண்டு ஒதுக்கித்தள்ளவேண்டும். அப்பொழுது தான், இந்தத்தீவில் நிரந்தரமான சமாதானம் ஏற்படும்.

## ஜனாதிபதி தேர்தலின் பின்
### பொதுத் தேர்தல் நடைபெறும்?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் பெறும் முயற்சிகளை பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கட்சி உறுப்பினர்களின் கருத்தை அறியும் பணி நடைபெறுவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

விருப்பத் தெரிவு முறையை அகற்றி மீண்டும் தொகுதி முறையில் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையிலான தேர்தலை நடத்தவும் திட்டமிடப்படுவதாகவும் தெரிய வருகிறது.

## யுத்தமா? - வீடா?
### ராணுவம் மத்தியில் கேள்வி

(கொழும்பு)

யுத்தம்செய்வோமா? அன்றி வீட்டிற்கு திரும்பிச்செல்வோமா? என்ற இரண்டும் கெட்டான் நிலைகளில் வடக்கு-கிழக்கு இராணுவத்தினர் இருப்பதாக ''திவுலே'' என்ற சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இராணுவ முகாமிற்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த விஜயம் மேற்கொண்ட பின்னர் இராணுவத்தினர் மனோநிலை 'யுத்தமா?-வீடா?' என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதை தாம் வரவேற்பதாக இந்தியா கூறுகிறது இதற்கு தமிழ் நாட்டு விடயமே காரணம். ஏனெனில் இந்தியாவிலுள்ள தமிழர்கள் இலங்கை தமிழர்களுக்கான உரிமையை விடுதலைப் புலிகளே பெற்றுக் கொடுக்கக்கூடியவர்கள் எனக் கருதுவதால் தமிழ் போராளிகளை நசுக்க இலங்கைக்கு இந்திய அரசு உதவியளித்தால் அது தமிழ் நாட்டில் எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் என்பதினாலாகும். 1987-90 காலப் பகுதியில் விடுதலைப் புலிகளுடனான போரில் கற்ற பாடத்தையடுத்து எதிர்காலத்தில் இலங்கைக்கு படைகளை அனுப்புவதில்லை என இந்தியா முடிவுசெய்துள்ளது. எனினும் இந்தியா இலங்கை படைகளுக்கான ஆயுதங்கள், விமான மற்றும் கடற்படை உதவிகளை வழங்கமுடியும்.

கடந்த காலத்தில் ஜனாதிபதி பிரேமதாச அரசு போலன்றி பிரதமர் சந்திரிகாவின் அரசு விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களின் போது செயற்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

(பேசாலை , மல்லிகா (பிரான்ஸ்), ரவி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், கலிஸ்ரா, காமல், கிறிசாந்தி (கொழும்பு), பிராங்லி, நிசாந்தன் (மன்னார்), நிதர்சன், நிவேதா, (கொழும்பு), சிறோமி (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

தகவல்:
இ. ரகு

(9403)

## மரண அறிவித்தல்
### Dr. கந்தவனம் வேலாயுதம்பிள்ளை

அல்வாயைப் பிறப்பிடமாகவும், பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. க. வேலாயுதம்பிள்ளை அவர்கள் 09-09-1994 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வளர்மதி (ஆசிரியை), பகீரதன் (U. K), தயாபரன் (U. K), ஜீவமதி, ரூபமதி (விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (13-09-94) பொலிகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நறுவிலியடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
வே. வளர்மதி (மகள்)

(9402)

யாழ். ஸ்ரீதரில்
தினசரி காலை 10.30, மாலை 6.00
WAY OF THE DRAGON
[கராட்டி]
16-09-1994 வெள்ளி முதல்
RAMBO III
(தாக்குதல் சித்திரம்)
தினசரி 10-30 4-00 6-00

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
CIRCUS
இதனுடன்
BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
(சி-10230)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.